www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

JANASAKTHI WEEKLY மக்கள் வார இதழ்



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 88 இதழ் 19 | 2025 ஆகஸ்ட் 10 - ஆகஸ்ட் 16 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15



# சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க சட்டம்

## முதலமைச்சரிடம் தலைவர்கள் நேரில் வலியுறுத்தல்

**சாதி ஆணவப் படுகொலைகள் அதிகரித்து வருவது முற்போக்கான மாநிலத்திற்கு அழகல்ல என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.**

சாதி ஆணவக் கொலைகளைத் தடுக்கும் வகையில் வலிமையான சட்டம் இயற்ற வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் ஆகியோர் நேரில் சந்தித்து வலியுறுத்தினர். அப்போது முதலமைச்சரின் உடல்நலம் குறித்தும் விசாரித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வன்னியரசு, தலைமை நிலையச் செயலாளர் பாலசிங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் சாமுவேல்ராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, “சாதி ஆணவப் படுகொலைகள் அதிகரித்து வருவது மிகவும் கவலைக்குரியது. சாதி ஆணவப் படுகொலை என்று சொல்லும்போது பட்டியல் இனத்தைச் சேர்ந்த இளைஞர் பிற்படுத்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண்ணைக் காதலிப்பதால், இந்தப் படுகொலை நடைபெறுகிறது என்றுதான் பொதுவாகப் பேசப்படுகிறது. அதேநேரத்தில் ஒரே சாதிக்குள் காதலிப்பதைத் தங்களுடைய குடும்ப கவுரவப் பிரச்சினையாகக் கருதும் மோசமான நிலையும் இருக்கிறது. அதன் காரணமாகவே இந்தக் கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இப்படி அதிகரித்து வருவது முற்போக்கான மாநிலத்திற்கு அழகல்ல.

இந்தியாவில் தமிழ்நாடு பல்வேறு வகைகளில் வளர்ச்சி பெற்ற மாநிலம். கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்றவற்றில் வளர்ந்த மாநிலம். சமூகநீதியிலும் முன்னேறிய மாநிலம். இதேபோன்று சாதிய வெறித்தனத்தில் இருந்தும் விடுபட வேண்டிய அவசியமும், தேவையும் இருக்கிறது.

எனவே, சாதி ஆணவக் கொலைகளுக்கு எதிரான விழிப்புணர்வு மக்களிடம் ஏற்பட வேண்டும். அதேநேரத்தில் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் சாதி ஆணவக் கொலைகளைத் தடுக்க முடியும். தடுக்க வேண்டும் என்பதற்காக மூன்று கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்திட்ட கோரிக்கை மனுவை முதலமைச்சரிடம் கொடுத்தோம். தனிச்சட்டத்தின் தேவைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினோம். அவற்றை முழுமையாகக் கேட்டதுடன், கோரிக்கை விண்ணப்பத்தையும் படித்தார். அதனைப் பரிசீலிப்பதாகக் கூறினார். சட்டத்தின் தேவையை அரசும் உணர்ந்திருக்கிறது. முதலமைச்சரும் உணர்ந்திருக்கிறார். எனவே விரைவாகச் சட்டம் கொண்டு வருவார் என எதிர்பார்க்கிறோம். கொண்டு வர வேண்டும் என விரும்புகிறோம்” என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்தார்.

## கிருஷ்ணகிரி மாவட்ட மாநாடு: எழுச்சிமிகு பேரணி



செய்தி 2 ஆம் பக்கம்

# ஆணவப்படுகொலையைத் தடுத்திட தனிச்சட்டம் இயற்றிட வேண்டும்

## திருவாரூர் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்





சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் ‘சின்னக் கூத்தன்’, ‘பெரிய கூத்தன்’ என்ற இரு பெருநிலக்கிழார்களால் ஆளப்பட்டு வந்த “கூத்தனூர்” என்ற மிகச்சிறிய ஊர். வேளாண்மைத் தொழிலில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. நாளடைவில் பல்வேறு ஊர்களிலிருந்து இங்கு குடியேறிய நமது முன்னோர்களால், “நல்லூர்” என்ற வார்த்தையையும் ஊரின் பெயரோடு சேர்த்து “கூத்தாநல்லூர்” எனும் அழகிய பெயரினைச் சூட்டினார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட 25வது மாநாடு கூத்தாநல்லூரில் நடைபெற்றது. முன்னதாக கூத்தாநல்லூர் பாலத்திலிருந்து பிரதிநிதி தோழர்கள் செங்கொடியைக் கையில் ஏந்தி அணிவகுத்தார்கள். பேரணி முடிவில் மாநாடு நடைபெறும் மண்டபத்திற்கு வருகை தந்தது. பின்னர், மாநாட்டுக் கொடியைக் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஏற்ற, மற்ற 24 கொடிகளையும் ஒன்றியச் செயலாளர்கள் மற்றும் மூத்த தோழர்கள் ஏற்றினார்கள். தியாகிகள் நினைவு மேடையில் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுச் செயலாளர் கோ. பழனிச்சாமி மாலை அணிவித்து மலர் தூவினார். தோழர்கள் மலர் தூவி வீர வணக்கம் செலுத்தினார்கள்.

மாநாட்டிற்குச் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் தீன.கௌதமன், மாதர் சங்க மாவட்டச்செயலாளர் கே.சுஜாதா ஆகியோர் தலைமையேற்றார்கள். கூத்தாநல்லூர் நகரச் செயலாளர் பெ.முருகேசு வரவேற்றுப் பேசினார். இரங்கல் தீர்மானத்தை விதொச மாவட்டச் செயலாளர் கு.ராஜா முன்மொழிந்தார். மாநாட்டைக் கட்சியின் மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன் துவக்கி வைத்துப் பேசினார்.

விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.உலகநாதன், விதொச மாநிலச் செயலாளர் அ.பாஸ்கர், மாநில நிர்வாகக் குழு பி.பத்மாவதி, மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.வையாபுரி ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் ஆர்.சந்திரசேகர் ஆசாத் அரசியல் அறிக்கையினை முன்மொழிந்தார். மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.கேசவராஜ் வேலை அறிக்கையை முன்மொழிந்தார். அமைப்பு நிலை அறிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் முன்மொழிந்தார். விவாதத்திற்குப் பின்னர் வேலை அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 75 பேர் கொண்ட பொதுக் குழு தேர்வு செய்யப்பட்டது. இதில் மாவட்டச் செயலாளராக எஸ்.கேசவராஜ் தேர்வு செய்யப்பட்டார்.

இந்தியாவின் அரசியல் சட்டத்தின் மதசார்பின்மை, ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றை பேணிப் பாதுகாத்திடவும், அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக, இடதுசாரி கட்சிகளும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். தமிழகத்தின் காவிரி நதிநீர்ப் பங்கீட்டின் உரிமையை நிலை நாட்டிட வேண்டும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தை முழுமையாக அமல்படுத்திட வேண்டும். 100 நாள் வேலையை 200 நாளாகவும், நாள் ஊதியமாக 600 வழங்கிடவும், நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்திட வேண்டும். மருத்துவம், பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்ய வேண்டும். பயிர்க் காப்பீடு திட்டத்தை அரசே ஏற்று அமல்படுத்திட வேண்டும்.

திருவாரூரில் இயங்கி வரும் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சேர்க்கையில், வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். மன்னார்குடியில் இருந்து கோட்டூர் வழியாக திருத்துறைப்பூண்டியை இணைக்கும் புதிய ரயில் பாதை அமைத்திட வேண்டும். மன்னார்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைத்திட வேண்டும். ஆணவப் படுகொலையைத் தடுத்திட தனிச்சட்டம் இயற்றிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஜோலார்பேட்டை – ஓசூர் வழியாகப் புதிய ரயில்பாதை அமைக்க வேண்டும்






## கிருஷ்ணகிரி மாவட்ட மாநாடு வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிருஷ்ணகிரி மாவட்ட 25வது மாநாடு ஆகஸ்ட் 3, 4 ஆகிய இரண்டு தினங்கள் தளியில் நடைபெற்றது. கட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இத்தருணத்தில் 100 அடி கம்பத்தில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் செங்கொடி ஏற்றி, செம்படையின் மரியாதை ஏற்றுக்கொண்டார்.

பின்னர் நடைபெற்ற செம்படைப் பேரணி, பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் டி.இராமச்சந்திரன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் டி.சின்னசாமி முன்னிலையில், மாநிலக் குழு உறுப்பினர் ஆர்.சுந்தரவள்ளி வரவேற்புரை ஆற்றினார். அதில் பல்லாயிரக்கணக்கான செந்தொண்டர்கள், கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். இதில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.இரவி, மாநிலக் குழு உறுப்பினர் எம்.இலகுமைய்யா ஆகியோர் அரசியல் உரையாற்றினார்கள், மாவட்ட துணைச்செயலாளர் எம்.பூதட்டிப்பா நன்றியுரை கூறினார்.

இரண்டாம் நாள் பிரதிநிதிகள் மாநாட்டிற்கு, மாநிலக் குழு உறுப்பினர்கள் எம்.கே.மாதையன், பி.பழனி, ஆர்.சுந்தரவள்ளி தலைமை தாங்கினர். மாவட்ட துணைச் செயலாளர் டி.சின்னசாமி அஞ்சலித் தீர்மானம் வாசித்தார், மாவட்ட துணைச் செயலாளர் எம்.பூதட்டியப்பா வரவேற்புரை வழங்க, மாநாட்டைக் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி தொடங்கி வைத்துக் கட்சியின் அமைப்பு நிலை மற்றும் அரசியல் உரையாற்றினார், மாநிலச் செயற் குழு உறுப்பினர் எம்.இரவி, எம்.இலகுமைய்யா ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டச் செயலாளர் டி.இராமச்சந்திரன் எம்எல்ஏ வேலைஅறிக்கை முன்வைத்தார். அறிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்னர் 71 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யபட்டது. மாவட்டச் செயலாளராக டி.இராமச்சந்திரன் எம்எல்ஏ தேர்வு செய்யப்பட்டார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் மாநாட்டு நிறைவுரையாற்றினார். மாநிலக் குழு உறுப்பினர் டி.கோவிந்தன் நன்றியுரை ஆற்றினார்.

ஜோலார்பேட்டை, கிருஷ்ணகிரி, ஓசூர் வழியாக புதிய ரயில் பாதை அமைக்க வேண்டும்.

அஞ்செட்டி, தளி பகுதிகளில் யானை நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் பயிர்ச் சேதம், உயிர்ச் சேதம் ஏற்படுகின்றன. இவற்றுக்கு உரிய நஷ்ட ஈடும், பாதுகாப்பும் அளிக்க வேண்டும்.

அஞ்செட்டி, உரிகம், பெட்ட முகிலம் ஆகிய பகுதிகளில், காவிரி தெற்குச் சரணாலயம் அமைந்துள்ளதால் ஆடு, மாடுகள் மேய்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது. வளர்ச்சிப் பணிகளுக்கும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையை உடனடியாக நீக்கி, மேய்ச்சல் உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

கிருஷ்ணகிரியில் மாம்பழ விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. எனவே அரசு கட்டுப்படியான விலை கிடைக்கவும், இந்தப் பகுதியில் மாம்பழக்கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

என்னேகோல் ஏரியிலிருந்து கிருஷ்ணகிரி, பர்கூர் ஏரிகளுக்குக் காவிரி தண்ணீரை நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆகஸ்ட் 15, 16, 17, 18 சேலத்தில்**
**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்**
**26வது தமிழ்நாடு மாநில மாநாடு!**

கட்சிக் கடிதம்

# போர் முழக்கம் எழுப்பி வா!



மாநில மாநாட்டை நோக்கி... 8

போர்க்குணமிக்க தோழர்களே!

**ஆர்.எஸ்.எஸ் கும்பல் மெல்ல, மெல்ல ஜனநாயகத்தைச் சாகடித்து வருகின்றது. அனைத்தையும், அது அரசியல் சாசனத்துக்கு விரோதமானதாக இருந்தாலும் கூட, தனது கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ள அரசு அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துகிறது.**

அவ்வாறு நிறைவேற்றுவதன் மூலம் ஜனநாயகம் அற்ற தாங்கள் விரும்பி நேசிக்கும் பாசிசத்தை அமல்படுத்திட முயல்கின்றது. நமது நாட்டு மக்கள் நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதன்மூலம் தாங்கள் விரும்பும் கட்சியை வேட்பாளர்களை ஆதரித்து வாக்களித்து வருகின்றனர்.

வாக்களிப்பது, முன்மொழிவது, போட்டியிடுவது ஆகிய அனைத்தும் இந்தியக் குடிமகனாகப் பிறந்த வயது வந்த அனைவருக்கும் அது பொருந்தும்.

அத்தகைய ஜனநாயக உரிமைகளைப் பறிக்க ஆழக் குழி தோண்டிப் புதைக்கத் தொடங்கிவிட்டது பாஜக ஒன்றிய அரசு.

தேர்தல் ஆணையம் தனது சுதந்திரத் தன்மையை இழந்து விட்டது. பா.ஜ.கவின் கட்டளையை நிறைவேற்றும் அருவருக்கத்தக்க அமைப்பாக மாறிப் போய் உள்ளது மிகுந்த கவலைக்குரியது.

தேர்தல் ஆணையத்தைக் கொண்டு, வாக்காளர்களை இரு வகையாகப் பிரிக்கின்றது. ஒன்று பாஜகவிற்கு ஆதரவாக வாக்களிக்கும் வாக்காளர்கள். மற்றொன்று பாஜகவிற்கு எதிராக வாக்களிக்கக் கூடியவர்கள் என இரண்டாகப் பிரித்து, எதிராக வாக்களிக்கக் கூடியவர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து முழுமையாக நீக்கம் செய்கின்ற பணியைத் தேர்தல் ஆணையத்தின் மூலம் மேற்கொள்கிறது.

தீவிர சரிபார்ப்பு என்கிற பெயரால் பீகார் மாநிலத்தில் ஏறத்தாழ 65 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீக்கப்படுபவர்கள் பெரும்பாலும் சிறுபான்மை மக்கள், தலித் மக்கள் ஆவார்கள்.

இத்தகைய மக்கள் மறந்தும் பாஜகவிற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என்பது ரகசியமான ஒன்றல்ல.

இவர்கள் இந்தியக் குடிமக்கள்தான், வாக்களிக்கும் வயதுடைய தகுதி படைத்தவர்கள்தான்.

ஆனால் இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை முற்றாக மறுக்கப்பட்டு விட்டது. இதன்மூலம் பாஜக தான் போட்டியிடும் அனைத்துப் பேரவைத் தொகுதிகளிலும் மிக எளிதில் வெற்றி பெற முடியும். கடும் போட்டி ஏற்படும் சூழலில் வேட்பாளர்கள் மிகச் சொற்பமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி தோல்விகள் தீர்மானிக்கப்படும்.

தமிழகத்தில் நடைபெற்ற பேரவைத் தேர்தல்களில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்கள் உண்டு. பீகாரைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும் தீவிர சரிபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு மேற்கொள்ளப்படும் போது, பெயர்கள் நீக்கம் மட்டுமல்ல, அத்துடன் சேர்ந்து புதிய வாக்காளர்களும் சேர்க்கப்படுவார்கள்!

குறிப்பாக பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியைப் படித்த போதிலும், அங்கே வேலையின்றி இந்தியைத் திணிக்காதே எனக் கூறும் நம் தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ளார்கள்.

புலம்பெயர்ந்த இத்தகைய தொழிலாளர்கள் தமிழகம் முழுவதும் நிரம்பியுள்ளனர்.

சாகுபடிப் பணிகள், உணவகங்கள், கட்டுமானப் பணிகள், பஞ்சாலை உட்பட பல்வேறு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

இவர்கள் அமைப்பு சாராத் தொழிலாளர்கள், இவர்களை காலநேரமின்றி குறைந்த கூலிக்கு வேலை வாங்க வேலை அளிப்போர் இவர்களை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

தங்களின் கொடூரமான சுரண்டலுக்கு இத்தகைய புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்பால் இரக்கமற்ற சுரண்டல் கூட்டம் இன்முகம் காட்டுகின்றது.

தாங்கள் அதிக நேரம் வேலை செய்கின்றோம் என்பதும், குறைந்த கூலிதான் பெறுகின்றோம் என்பதும் அவர்கள் அறியாத ஒன்றல்ல.

தங்கள் மாநிலங்களில் நிலவும் வேலையின்மை, வறுமை காரணமாக இத்தகைய கடும் உழைப்பிற்கும் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை நிர்வகிப்பது ஒப்பந்தக்காரர்கள். வட மாநிலத்துப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை தமிழ்நாட்டுத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியலில் தேர்தல் ஆணையம் சேர்க்க உள்ளது. இது எத்தகைய விளைவுகளை உருவாக்கும்?

ஜனநாயகப் போர்வையைப் போர்த்திக்கொண்டே, குறுக்கு வழிகளில் தங்களின் வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொள்ள பாஜக முயல்வது வெளிப்படையாகத் தெரிகின்றது.

பாஜகவின் குறுக்கு வழிகளுக்குத் தேர்தல் ஆணையம் சட்டபூர்வமாக உடந்தையாகச் செயல்பட்டு வருகின்றது.



◆ கொல்லம் மாவட்ட மாநாடு

இது எத்தகைய அப்பட்டமான ஜனநாயக விரோதமான செயல்! இத்தகைய செயல் நாட்டில் எப்போதும் நடந்தது இல்லை.

தோழர்களே, நமது நாட்டில் அன்னியர் ஆட்சியை அகற்றிட இருநூறு ஆண்டுகாலம் போராடினோம். பெரும் தியாகத்தைச் செய்தோம். விலை மதிக்க முடியாத மாமனிதர்களின் உயிர்கள் பறி போயின, லட்சக்கணக்கானவர்கள் சிறை சித்திரவதைகளுக்கு உள்ளாகினர், சாதி, மத, மொழி வேறுபாடுகளின்றி ஒன்றுபட்டுப் போர் புரிந்தோம், அத்தகைய மகத்தான விடுதலைக்கான போராட்டத்தில் இன்று அதிகார பீடத்தில் அமர்ந்து இருப்பவர்களுக்கு எப்பங்கும் இல்லை என்பது மட்டுமல்ல, வெள்ளையர் அரசுக்குத் துணை நின்ற துரோகக் கும்பலாகும்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், சுதந்திர நாட்டில் 1952ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது, ஏழை பணக்காரர் என்று படித்தவர், பாமரர், ஆண் பெண் வேறுபாடுகளின்றி அனைவருக்கும் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

ஆனால் இன்று வாக்குரிமையைப் பறிக்கும் கொடூரச் செயல் நடைபெற்று வருகின்றது. பீகார் அடுத்து தமிழ்நாடு என்றல்ல, அடுத்தடுத்து நாடு முழுவதும் மேற்கொள்வார்கள்.

அன்று நடந்தது அன்னியர் ஆட்சிக்கு எதிரான போராட்டம். இன்று எனது வாக்குரிமையைப் பறிக்காதே எனும் போராட்டத்தை நடத்திட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்!

நாட்டு மக்களின் வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை அப்பட்டமாகப் பறிக்கத் துடிக்கும் ஒரு ஆட்சி இனியும் நீடிக்க நாம் அனுமதிக்கலாமா? அனுமதித்தால் அது எத்தகைய பேராபத்தாக முடியும் என்பதனை நாம் உணராமல் இருக்க முடியுமா?

வாழ்க்கைக்காக நம் மக்கள் நித்தம் நித்தம் போராடி வருகின்றார்கள், வேலையில்லை, வேலையில் இருப்பவர்களுக்கு உத்திரவாதம் இல்லை, உரிய ஊதியம் இல்லை, நாள்தோறும் விலைவாசி பன்மடங்கு உயர்ந்து கொண்டே வருகின்றது. இவைகளை எல்லாம் எதிர்த்துப் போராட வேண்டிய நிலை, நாடு முழுவதும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் தலை தூக்கி நிற்கின்றன. கொலைகளும், கொள்ளைகளும் நடந்தே வருகின்றன.

பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கூட பாதுகாப்பற்ற நிலை, மத வெறி, சாதி வெறி தூண்டப்படுகின்றது, சாதி ரீதியாக சமூக அடக்குமுறைக் கொடுமைகள் தலைவிரித்து தாண்டவமாடுகின்றன. இவைகளுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும், அதேவேளையில் இவை எல்லாவற்றிக்கும் மேலாக ஜனநாயகத்திற்கான போராட்டம் முதன்மை பெறுகின்றது.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. அங்கே அமைச்சர்களின் உரைகள் மிக அபத்தமான முறையில் உள்ளன.

மிக உயர்ந்தபட்ச அமைப்பாக உள்ள நாடாளுமன்றத்திலேயே அமைச்சர்கள் உரை அத்துமீறலாக உள்ளது. எதிர்க்கட்சிகளை மிரட்டும் தொனியில் பேசி வருகின்றனர்.

இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் போராட்டங்களைத் தீவிரப்படுத்திட வேண்டியது இன்றைய தலையாய கடமையாகும். இரண்டாவது கட்ட சுதந்திரப் போரை நடத்தித்தான் ஆக வேண்டும். முதல் சுதந்திரப் போரில் நம் முன்னோர்கள் பங்கு பெற்றனர், தியாகம் செய்தனர். அவர்கள் சிந்திய இரத்தத்தில் நாம் இன்று சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றோம்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிகாக்க வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் நம் கண் முன்னே உள்ளது.

மக்களை ஒன்று திரட்டவும், அரசியல் ரீதியாகப் பங்கேற்கச் செய்யவும் நாம் ஆற்றவேண்டிய அரசியல் பணிகள் ஏராளம்!

அதற்காக நம்மைப் புதுப்பித்துக்கொள்ளத்தான், உத்திகளைத் திட்டமிடத்தான் மாநாடு! ஆம் தோழர்களே, சேலத்தில் நடைபெற உள்ள மாநில மாநாடு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த மாநாடாகும். அத்தகைய மாநாட்டின் நிறைவில் ஆகஸ்ட் 18 ஆம் நாள் நடைபெற உள்ள எழுச்சிமிக்கப் பேரணி.

போர்ப் பரணி பாடி வா!
போர் முழக்கம் எழுப்பி வா!
பாட்டுக் கொரு புலவன் பாரதி பாடினான்.
''இனி ஒரு விதி செய்வோம் அதை
எந்த நாளும் காப்போம்'' என்று முழங்கினான்.

ஆம் நாட்டில் இனி ஒரு விதி செய்திட அணி திரள்வோம். அர்ப்பணித்து அணி திரள்வோம்.

கடல் அலைகளை மிஞ்சிடும், செங்கடல் அலையாய் நூறாய், ஆயிரமாய், லட்சம் லட்சமாய் ஒன்று கூடுவோம்.

ஒரு அணியாய் அணி திரண்டு அணி வகுப்போம்.

எங்கெங்கும் காணினும், செங்கொடிப் புதல்வர்களின் பெருங்கூட்டமாய் சேலம் மாநகரம் செங்கடலாகட்டும்.

மீண்டும் சந்திப்போம்
வணக்கம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 19

## தேசபக்தி! எச்சரிக்கை!

அருணாச்சலப் பிரதேசத்தில் 20 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டார்கள், சீனா இந்தியப் பகுதிகளை ஆக்கிரமித்து இருக்கிறது என்று ராகுல் காந்தி பேசியது பற்றிக் குறிப்பிட்ட இந்திய உச்ச நீதிமன்றம், "அவர் ஒரு இந்தியராக இருந்திருந்தால் இவ்வாறு பேசியிருக்க மாட்டார். அங்கு அவர் போனாரா? உங்களிடம் தகுதிவாய்ந்த ஆதாரம் இருக்கிறதா?" என்றெல்லாம் கேட்டுவிட்டு "மோதல் என்று வந்தால் இருதரப்பிலும் இழப்பு ஏற்படத்தான் செய்யும்" என்று பதிலும் சொல்லி இருக்கிறது!

"அவர் நாடாளுமன்றத்தில் பேச வேண்டியதுதானே! ஏன் ஊடகங்களிடம் பேசுகிறார்" என்ற கேள்வியையும் உச்சநீதிமன்றம் கேட்டு இருக்கிறது.

ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர், தனது நாடு பாதிக்கப்படுவதாகக் கருதுகிற விஷயங்களை, பொதுவெளியில் பேசக்கூடாது என்பது என்ன வகைப்பட்ட ஜனநாயகம்? நாடாளுமன்றத்திலும் அவரைப் பேச விடுவதில்லை என்பது தனிக்கதை.

மும்பையில் தாக்குதல் நடத்திய அஜ்மல் கசாப், எமது நாட்டினர் அல்ல என்று பாகிஸ்தான் சொன்ன போது, அதை மறுத்து அவர் பாகிஸ்தான் குடிமகன்தான் என்று நிறுவியவர் பாகிஸ்தான் பத்திரிகையாளர் சையத் சலீம் கான். அவர் அங்கு சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து எழுதிய சிங்களப் பத்திரிகையாளர்களான லசந்தா விக்கிரமதுங்கே, விக்டர் இவான் ஆகியோர் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்நியர்களான இந்தியர்களையும், வேற்று இனத்தவராக தமிழர்களையும் அச்சுறுத்தும் போது, தனது நாட்டின் பயங்கரவாதத்தை, இனவெறியை எதிர்த்து நின்று, அதனால் தம் உயிர் பறிக்கப்படும் என்று தெரிந்தும் நியாயத்தைப் பேசி, படுகொலை செய்யப்பட்ட உத்தம வீரர்கள் இவர்கள்.

இந்தியர்கள் மட்டும் கோழைகளாக இருக்க வேண்டுமாம். அதுதான் தேசபக்தியாம்! பாகிஸ்தானும் சிங்கள அரசும் என்ன செய்தனவோ, அதையே செய்ய இந்திய அரசும் தலைப்படுகிறது.

மும்பை உயர்நீதிமன்றம் மற்றொரு வழக்கில் தீர்ப்பளித்து இருக்கிறது. பாலஸ்தீனியர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, ஆர்ப்பாட்டம் நடத்த காவல்துறை அனுமதி மறுத்த போது, அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டது அந்த வழக்கு.

"ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள பிரச்சனை உங்களுக்கு எதற்கு? நமது நாட்டில் பிரச்சனைகளா இல்லை. பாலஸ்தீனத்தைப் பற்றிப் பேசுவது தேசபக்தி அல்ல. நமது நாட்டிலேயே ஏராளமான பிரச்சனைகள் இருக்கின்றன. நீங்கள் தேசபக்தர்களானால், மாசுபடுதல், வெள்ளம், குப்பை குவிதல், சாக்கடை பற்றிய பிரச்சனைகளைப் பேசுங்கள்" என்று தீர்ப்பு எழுதப்பட்டுள்ளது.

அமெரிக்கா உட்பட, உலகம் முழுக்க இஸ்ரேலைக் கண்டித்து லட்சக்கணக்கானோர் பங்கேற்கும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த மக்களைத் தேசத்துரோகிகள் என்று அந்த நாடுகளின் அரசுகளோ, நீதிமன்றங்களோ சொல்லவில்லை. காவல்துறையும் தடுக்கவில்லை.

அதையே இந்தியாவில் பேசினால், ஆர்ப்பாட்டம் செய்தால், தேச விரோதிகள் என்று முன்பு ஆர்எஸ்எஸ் கூறிக் கொண்டிருந்தது. இப்போது நீதிமன்றங்களும் அதே குரலில் பேசுகின்றன.

இந்திய அரசியல் சாசனத்தின் 19(1)(ஏ) (பி) பிரிவுகளின் படி இந்திய மக்களுக்குத் தமது கருத்துக்களை எழுதுகிற, பேசுகிற, கூட்டம் கூடுகிற, ஆர்ப்பாட்டம் நடத்துகிற உரிமைகள் அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றம், அரசியல் சாசனத்தை அகற்றி வைத்துவிட்டு, தேசபக்திக்கு வியாக்கியானம் எழுதிக் கொண்டிருக்கிறது!

நீதிபதிகளின் நியமனம் இப்போது நாக்பூர் வழியாக நடந்து கொண்டிருக்கிறது. எஜமானின் குரல் எதிரொலிக்கப்படுகிறது.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு எதிராகப் பேசாமல் ஒதுங்கி இருங்கள் என்று சொல்கிறது நீதிமன்றம். அதன் பொருள் என்ன? பாலஸ்தீனர்களைக் கொல்லும் இஸ்ரேல் அரசை ஆதரிப்பதுதான், இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கை என்பதுதானே!

தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள அரசு, பாலஸ்தீனர்களைக் கொன்று குவித்த இஸ்ரேல் அரசு ஆகியவற்றைப் பாராட்டி ஆர்எஸ்எஸ் பேசும். அது தேசபக்தி! யூதர்களைக் கொன்று குவித்த ஹிட்லரையும், முசோலினியையும் தமது வழிகாட்டிகளாக ஆர்எஸ்எஸ் இன்றைக்கும் போற்றிப் புகழ்வது தேச பக்தி!

ஆனால், படுகொலைக்கு ஆளான பாலஸ்தீனர்களையும், தமிழர்களையும் பற்றி பேசி, கொலை செய்தவர்களைக் கண்டிப்பவர்கள் தேச விரோதிகள்!

தேசபக்தி என்பது ஒரு அரசியல் ஆயுதமாக மாற்றப்படுகிறது. அரசின் கொள்கைகளை ஆட்சேபிப்போருக்கு எதிராக அது திருப்பப்படுகிறது.

தேசபக்தி என்பது அரசியல் விமர்சனங்களைக் கட்டுப்படுத்தும் தடி அல்ல. அது மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் கவசம்!

## சேலம் ஓமலூர் வட்டத்தில்
# எம்.கல்யாணசுந்தரமும் கே.டி.ராஜுவும் நடத்திய போராட்டம்



ப.பரமசிவம்

**சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் முழுவதும் வறட்சியால் விவசாயம் நடைபெறவில்லை கைவினைத் தொழில்களும் சரியாக நடைபெறாததால் மக்கள் பசியால் பட்டினியால் வாடினார்கள். ஓமலூர் தாலுகா முழுவதும் மக்கள் வட்டிக் கடைக்காரர்களிடம் தனது வீட்டுப் பண்ட பாத்திரங்கள், நகைகள், மூக்குத்தி உள்பட தாலியை அடகு வைத்து விட்டார்கள்.**

1975இல் எமர்ஜென்ஸி நேரத்தில் ஓமலூர் வட்ட தோழர்களோடு ராஜு உள்பட, எஸ்.குப்புசாமி, வெங்கடாசலம், ராமலிங்கம் இளைஞர் மன்ற மாவட்டச் செயலாளராக இருந்த கே.ரங்கநாதன் ஆகியோர் ஓமலூர் வட்டாரத்தில் உள்ள அடகு வைத்துப் பாதிக்கப்பட்ட மக்களை ஒன்று திரட்டி அடகுக் கடைகளில் வைத்த பொருள்களை மீட்டுக் கொடுத்தார்கள்.



◆ எம்.கல்யாணசுந்தரம்



◆ எஸ்.குப்புசாமி



◆ கே.ரங்கநாதன்



◆ கே.டி.ராஜு

ஓமலூர் வட்டத்தில் இருக்கும் கருப்பூர் கருப்பூரைச் சுற்றி தமிழ்நாடு மேகனசைட், டால்மியா மேகனசைட், பர்னன் கோ மேகனசைட் ஆகிய மேகனசைட் நிறுவனங்கள் மத்தியில்தான் கருப்பூர் ஊராட்சி. இந்தக் கருப்பூரில்தான் எம்.கல்யாணசுந்தரம் மாமனார் வீடு. அங்கு மாமனார் வீட்டில்தான் எம்.கே மனைவியோடு தங்கிருந்தார். அதனால் மேகனசைட் ஏ.ஐ.டி.யு.சி. சங்கத்திற்குத் தலைவராகவும் கே.பாலன் செயலாளராகவும் இருந்தார்கள். மேகனசைட் தொழிலாளர்களுக்கு பென்சன் கிடைக்கவில்லை, பென்சன் கிடைக்க எம்.கல்யாணசுந்தரம் தலைமையில் கடுமையான போராட்டங்களை நடத்தி மேகனசைட் தொழிலாளர்களுக்கு பென்சன் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

1968 இல் எம்.கல்யாணசுந்தரம் கருப்பூர் ஊராட்சித் தலைவராக ஊர் மக்களால் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். ஊராட்சிக்கு நிரந்தர வருவாயை உருவாக்க நீர்ப்பிடிப்பு இல்லாத ஏரியில் தென்னை மரங்களை நட்டு வைத்தார். மானவாரி தரிசு நிலங்களை கருப்பூர் என்ஜினிரிங் காலேஜ் கட்ட எடுத்துக் கொடுத்து என்ஜினிரிங் கல்லூரி வர ஏற்பாடு செய்தார்.

கருப்பூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் மின்சாரமே கிடையாது. அந்த மக்கள் இரவில் சிமினி விளக்குகளையும், மண் விளக்குகளையும் மாக்கல் விளக்குகளையும் பித்தளை விளக்குகளையும் பயன்படுத்தி வந்தார்கள். ஊராட்சித் தலைவர் எம்.கல்யாணசுந்தரம் மக்கள் இருட்டில் வாழ்வதைக் கண்டு மனவேதனை அடைந்து மின்துறை அதிகாரிகளைச் சந்தித்துக் கடுமையாகப் போராடி மின்சார இணைப்பை கருப்பூர் ஊராட்சி மக்களுக்குக் கொண்டு வந்தார். அதனால் மின்சார டிரான்ஸ் பாரத்திற்கு கல்யாணசுந்தரம் என்று பெயர் வைக்கப்பட்டது. இதுவரை அந்தப் பெயரே நீடித்து நிற்கிறது.

கருப்பூர் ஊராட்சியை எம்.கல்யாணசுந்தரம் முன்முயற்சியால் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தினார். பேரூராட்சி ஆன பிறகு பேரூராட்சித் தலைவராக எஸ்.குப்புசாமியை மக்கள் ஆதரவோடு பேரூராட்சித் தலைவராக்கினார். அவர் 1986 லிருந்து 1991 வரை தலைவராக இருந்தார். குப்புசாமி ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் 1971 மற்றும் 1984 களில் நின்றார். ஆனால் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

எஸ்.குப்புசாமி பேரூராட்சித் தலைவராக இருந்த பொழுது வெள்ளைக்கல் ஜில்லா பகுதியில் தரிசு நிலமாக இருந்தது. வீடு இல்லாத மக்களுக்கு அந்த நிலத்தை எடுத்துக் கொடுக்க டால்மியா முதலாளியிடம் கடுமையாகப் போராடி, அந்த நிலத்தில் 100 க்கும் மேற்பட்ட வீட்டுமனை எடுத்துக் கொடுத்து வீடு கட்டி வாழ வகை செய்தார்கள்.

டால்மியா மேகனசைட்டைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை செட்டி சாவடியில் எஸ்.குப்புசாமி வெங்கடாசலம் மாவட்டச் செயலாளராக இருந்த கே.வி.ராமசாமி ஏஐவொய்இ மாவட்ட தலைவராக இருந்த கே.ரங்கநாதன் ஏஐவொய்இ மாவட்டச் செயலாளராக இருந்த கே.பி.விஸ்வநாதன் ஆகியோர் தலைமையில் நிலமற்ற விவசாயிகளைத் திரட்டிக் கடுமையாகப் போராடி கடைசியில் அந்நிலத்தில் ஏர் பிடித்து உழுத விவசாயிகளுக்கு நிலம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

1976 ல் உணவுப் பஞ்சத்தின் போது எஸ்.குப்புசாமி, வெங்கடாசலம், கே.ரங்கநாதன் மற்றும் நூற்றுக்கணக்கான கட்சித் தோழர்களைத் திரட்டி ஓமலூர் வட்டம் முழுதுமுள்ள உணவு தானியங்களைப் பதுக்கி வைத்துப் பஞ்சத்தை உருவாக்கியவர்களிடமிருந்து மக்களைத் திரட்டி பதுக்கலை எடுத்து நேரடியாக மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

ஓமலூர் வட்டம் பெரியப்பட்டியைச் சார்ந்த நல்லதம்பி கவுண்டர் பெரிய நிலக்கிழார் ஜமீனுக்குச் சமமானவர் பொட்டியபுரத்திலும் சாத்தூரிலும் தரிசாகக் கிடந்த நிலத்தை ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு எம்.கல்யாணசுந்தரம் தலைமையில் அந்தத் தரிசு நிலங்களை எடுத்து ஏழைகளுக்கு வீடு கட்ட ஏற்பாடு செய்து கொடுத்தார்.

அந்நிலம் முழுதும் எனக்குச் சொந்தமானதென்று நல்லதம்பி கவுண்டர் அடியாட்களை வைத்துக் கொண்டு நிலத்தில் வீடுகட்ட தடை செய்த வண்ணம் இருந்தார். அவைகளை எல்லாம் அந்தப் பகுதி மக்களைத் திரட்டி முறியடித்தார்கள். உடன் எஸ்.குப்புசாமி மாஸ்கோவில் மார்க்சியக் கல்வி பயின்ற வெங்கடாசலம் இளைஞர் மன்ற மாவட்ட தலைவர் ரங்கநாதன் மற்றும் நூற்றுக்கணக்கான கட்சித் தோழர்களையும் மக்களின் ஆதரவுடன் செய்ததால் நில மீட்புப் போராட்டம் வெற்றிகரமாக வெற்றி பெற்றது.

இதைப் பொருத்துக் கொள்ள முடியாத நல்லதம்பி கவுண்டர் எம்.கல்யாணசுந்தரத்தைக் கொல்லாமல் விட மாட்டேன் என்று ரவுடிக் கூட்டத்தைத் திரட்டிக் கொண்டிருந்தார். அந்தச் சவாலை எதிர்கொள்ள கருப்பூரில் பெரிய பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அந்நிலம் சம்பந்தப்பட்ட விவரங்களைக் கூறி மக்களைப் புரிய வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தை நடத்த விடாமல் நல்லதம்பி கவுண்டர் அடியாட்களைப் பயன்படுத்தினார். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மாவட்டம் முழுதும் இருந்து வந்து அதை முறியடித்தார்கள்.

செல்: 9442995040

# கட்டுமானத் தொழிலாளர்களே சேலம் மாநாட்டில் அணிவகுப்பீர்



என்.செல்வராஜ்

**அன்னாடம் காய்ச்சிகளாக வாழ்ந்து வந்த கட்டடத் தொழிலாளர்களான நம்மை, தொழிலாளர்கள் என்று அழைக்க வேண்டும். தொழிலாளர்களின் சட்ட பலன்கள் நமக்குக் கிடைக்க வேண்டும். என்று குரல் கொடுத்து நமக்காகக் களம் இறங்கிய கட்சி கம்யூனிஸ்ட் கட்சி.**



கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் எம்.எல்.ஏ, எம்பி குறிப்பாக இந்திரஜித் குப்தா என்கிற கம்யூனிஸ்ட் தலைவர் 1982ல் அக்டோபர் மாதம் நாடாளுமன்றத்தில் தனிநபர் மசோதா என்கிற வகையில் கட்டுமானத் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டத்தைத் தயார் செய்து நாடாளுமன்றத்தில் முன்வைத்து இந்தியக் கட்டுமானத் தொழிலாளர்களுக்காக நாடு தழுவிய ஒரு மத்தியச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று தாக்கல் செய்து போராடினார்.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்து அது நிறைவேறாததால் கட்டுமானத் தொழிலாளர்கள் மறியலுக்குப் புறப்படும் ஊர்வலம் தி.நகரில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் இருந்து முதல்வர் எம்ஜிஆர் இல்லத்தில் மறியல் போராட்டம் நடத்த புறப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அரணாக வந்து நின்றார்கள்.

அதன் பின்னரே எம்ஜிஆர் அரசு 82 ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டில் உழைப்புத் தொழிலாளர் பணிப் பாதுகாப்பு முறைப்படுத்துதல் சட்டம் கொண்டு வந்தது. அதுதான் இன்றைக்கு நல வாரியத்தைப் பிரசவித்தது.

தொழிலாளர் சட்டங்களை நலவாரியம் மூலமாக அமல்படுத்த வேண்டும் என்று சட்டத்தில் சரத்துக்களைச் சேர்த்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதான். அதோடு இணைந்து பலர் குரல் கொடுத்திருக்கலாம். ஆனால் இந்த மத்தியச் சட்டமும் மாநிலச் சட்டமும் வருவதற்குக் காரணமாக இருந்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதான்.

இன்றைக்கு இந்திய நாடு முழுமையும் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் செயல்படுகிறது என்றால் அதற்கு வழி செய்தவர்கள் கம்யூனிஸ்டுகள்தான்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் வாரியத்தில் பதிவு செய்த கட்டுமானத் தொழிலாளர்கள் மகப்பேறு உதவிகள், குழந்தைகளுக்கு ஆறாவது வகுப்பு முதல் ஒன்பதாவது வகுப்பு வரை வருடம் தலா ஆயிரம் ரூபாய், பத்தாம் வகுப்பு (பெண் குழந்தைகள் படிக்க 2400 ரூபாய், 11வது படிக்க மூன்றாயிரம் ரூபாய், பன்னிரண்டாவது படிக்க மூன்றா யிரம் ரூபாயும்)

பத்தாவது தேர்வு பெற்றால் 2400 ரூபாயும். பன்னிரண்டாவது தேர்வு பெற்றால் 3 ஆயிரம் ரூபாய்.

தொழிற்பயிற்சி டிப்ளமோ கல்வி பயில வருடம் 3 ஆயிரம் ரூபாய். இளநிலைப் பட்டப்படிப்புக்கு வருடம் 5000 ரூபாயும். முதல் நிலைப் பட்டப்படிப்பிற்கு வருடம் ஏழாயிரம் ரூபாய்.

எம்பிபிஎஸ் படிப்பிற்கும் ஐஐடி படிப்பிற்கும் முழுச் செலவுத் தொகையும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

பதிவு பெற்ற தொழிலாளி சாலை விபத்தில் சிக்கி இறந்து போனால் 2 லட்சம் ரூபாய். இயற்கையாக இறந்து போனால் 55 ஆயிரம் ரூபாய், வேலை செய்கிறபோது இறந்து போனால் 8 லட்சம் ரூபாய்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கிற வீடு கட்டும் தொழிலாளிக்கு வீடு இல்லை என்றால் வீட்டுமனை இருந்தால் வீடு கட்டுவதற்கு மானியமாகவே நான்கு லட்சம் ரூபாய், வீட்டு மனை இல்லை என்றால் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு வீடும் வழங்கப்படும் என்கிற அளவிலும் 60 வயதிற்குப் பிறகு 1200 ரூபாய் ஓய்வூதியம் என்கிற வகையிலும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நலவாரியம் வழங்குகிறது என்றால் கம்யூனிஸ்ட் கட்சி, அதன் சட்டமன்ற நாடாளுமன்ற, உறுப்பினர்கள். கட்டுமானத் தொழிலாளர்களைத் திரட்டி அந்தக் கோரிக்கைக்காகப் போராட வைத்தது ஏஐடியுசி.

இன்றைய மோடி அரசு கட்டுமானத் தொழிலாளர் சட்டங்களைச் சிதைக்கின்ற நோக்கில் செயல்படுகிறது. அதைப் பாதுகாக்க எதிர்த்துப் போராடும் சக்தியை நமக்குக் கொடுப்பது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே.

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் நடத்திய எல்லாப் போராட்டங்களுக்கும் பாதுகாப்பும் ஆலோசனையும் கொடுத்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

தொழிலாளி வர்க்கத்தின் பாதுகாவலனாக இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இது நூறாவது ஆண்டு.

நூறாவது ஆண்டில் சேலத்தில் தமிழ்நாடு மாநில மாநாடு ஆகஸ்ட் 15 தொடங்கி 18 வரை நடக்கிறது. ஆகஸ்ட் 18ஆம் தேதி மாநாட்டுப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான கட்டுமானத் தொழிலாளர்கள் தாங்களாக வாகனங்களை ஏற்பாடு செய்து அணிவகுத்து, சட்டபூர்வமாகக் கட்டடத் தொழிலாளர்களைப் பாதுகாத்த கம்யூனிஸ்ட் கட்சிக்கு நன்றி செலுத்தும் வகையில் பேரணியில் கலந்து கொண்டு முழக்கத்துடன் நடந்து செல்வது, பொதுக்கூட்டத்தில் தலைவர்களின் உரையைக் கேட்பது கட்டுமானத் தொழிலாளர்களின் கடமை.

**தொடர்புக்கு : 7200546107**

# சங்கிகளின் வன்முறைக்கு எதிராக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம்



சத்தீஸ்கர் மாநிலம் நாராயண்பூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிறுபான்மை யினர் மீதான வகுப்புவாதத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வலியுறுத்தியும், கேரளாவைச் சேர்ந்த இரண்டு கன்னியாஸ்திரிகள் மற்றும் அவர்களுடன் சென்ற சத்தீஸ்கர் இளம்பெண்கள் மூன்று பேரைத் தாக்கிய குற்றவாளிகள் மீது வழக்குப்பதிவு செய்யக் கோரியும் அவர்கள் முழக்கமிட்டனர்.

வன்முறையில் ஈடுபட்ட பஜ்ரங்தள் அமைப்புக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, சத்தீஸ்கர் மாநிலத்தை வெறுப்பு அரசியலின் ஆய்வமாக்க அனுமதிக்க மாட்டோம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

**விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பு ஆக்குவோம் என்று சொல்லி 700க்கும் மேற்பட்ட விவசாயிகளைச் சாகடித்தது ஏன்?**

**பிஜேபி அரசை விரட்ட சேலத்தில் அணி திரள்வோம்!**

# சாதி வெறி கொட்டம் அடக்க தேவை புதிய ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம்!



த.லெனின்

**தமிழ்நாடு முற்போக்கு மாநிலம். சனாதன எதிர்ப்பு, சமூக நீதி, பெண் உரிமை என்று அனைத்துத் தளங்களிலும் நின்று போராடிய மண்! சித்தர்கள் சாதி முறைக்கு எதிரான கலகக்காரர்களாகக் களம் கண்ட இடம், பக்தி இயக்கத்தில் கூட சாதி எதிர்ப்பு ஒரு முக்கியக் கூறாக இருந்தது.**

இதன் தொடர்ச்சியாகத்தான் பொதுவுடமை இயக்கமும், திராவிட இயக்கமும்சாதி முறைக்குஎதிரானபோரைக் கொடுத்தார்கள். அதன் வாயிலாகவே சமூக நீதியை நிலைநாட்ட, இடஒதுக்கீட்டை முதன் முதலில் அரங்கேற்றினார்கள். முதன்முதலாகப் பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டங்களை நிறைவேற்றிய இடம் தமிழ்நாடு! இப்படி அனைத்துப் பெருமைகளும் இருந்தும் இன்று தமிழ்நாடு ஆணவப் படுகொலைகளால் அல்லல்பட்டு நிற்கிறது.

## குடிப் பெருமை பாசிசம்!

இந்திய வகைப்பட்ட பாசிசமான ஆர்எஸ்எஸ்சும், பாஜக, சங்க பரிவாரங்கள் சமூக பொறியமைவு என்ற பெயரில் பச்சையாக சாதிப் பெருமிதங்களை வளர்த்தெடுக்கப்பல பொய்க் கதைகளையும், புனைச்சுருட்டுகளையும், ஆண்ட சாதி பெருமை கட்டுக்கதைகளையும் இட்டு நிரப்பி வருகின்றனர்.தமிழ் தேசியம் என்ற பெயரில் நாம் அனைவரும் தமிழர்கள் என்று உரத்து முழங்குவதற்குப் பதிலாக வலதுசாரி, சங்கப் பரிவார் அமைப்புகளைப் போலவே தமிழ்நாடு வகைப்பட்ட பாசிசமாக ‘குடிப் பெருமை’ என்ற பெருமித உணர்வை ஊட்டி வருகின்றன. அதன் விளைவாகத்தான் ஏற்கெனவே நீறுபூத்த நெருப்பாக இருந்த சாதி உணர்வு வெறியாகப் பிடித்து பெரும் தீயாய்ப் பற்றி எரிகிறது.

## கவின் ஆணவப் படுகொலை!

தமிழ்நாட்டில் நாம் நினைப்பதைப் போல சாதி மறுப்புத் திருமணங்கள் அவ்வளவு எளிதாக நடப்பதில்லை. திருநெல்வேலியில் நடந்த சமீபத்திய சம்பவம் இதற்கு ஓர் உதாரணம். மென் பொறியாளர் கவின் செல்வகணேஷ் என்கிற இளைஞரின் உயிரைப் பறித்த சாதி ஆணவக் கொலை தமிழகத்தையே உலுக்கியிருக்கிறது. நம் சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? காதலைக் கொண்டாடிய சமூகம் தமிழ்ச் சமூகம்! சங்க இலக்கியங்கள் இதன் பண்பாட்டு வளமையை இன்றும் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் இதுபோன்ற திருமணங்களை எதிர்க்க எந்த எல்லைக்கும், கொலை செய்யும் எல்லைக்கும் போக இவர்கள் தயாராக இருக்கிறார்கள். அந்த அளவிற்குச் சாதி வெறி ஊட்டப்பட்டிருக்கிறது.

தூத்துக்குடி மாவட்டம் ஏரலைச் சேர்ந்த கவின் செல்வகணேஷ் (27), பட்டியல் சாதியைச் சேர்ந்தவர். இவரது தந்தை சந்திரசேகர் ஒரு விவசாயி. தாய் தமிழ்ச்செல்வி ஆசிரியை. இவர்களின் மூத்த மகனான கவினும் திருநெல்வேலி கேடிசிநகரைச் சேர்ந்த சித்தா மருத்துவரான சுபாஷிணியும் காதலித்து வந்தனர். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சுபாஷிணியின் குடும்பத்தினர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. சுபாஷிணியின் தந்தை சரவணன், தாய் கிருஷ்ணகுமாரி இருவருமே காவல் துறையில் உதவி ஆய்வாளர்கள்.

சென்னையில் ஐ.டி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த கவின் சில நாள்களுக்கு முன், சொந்த ஊருக்குச் சென்றிருக்கிறார். ஜூலை 27 அன்று திருநெல்வேலியில் உள்ள ஒரு மருத்துவமனைக்குத் தன் தாயுடன் அவரது தாத்தாவை மருத்துவ சிகிச்சைக்காக அழைத்துச் சென்றிருந்தார். அங்கு சுபாஷிணி மருத்துவராகப் பணிபுரிந்துவந்தார்.

பொருளாதாரத்தில் நல்ல நிலையிலும், கைநிறைய ஊதியம் பெற்று வருகிறார் கவின். இருப்பினும் சுபாஷிணியுடன் பழகக் கூடாது என ஏற்கெனவே எச்சரித்துவந்த சுபாஷிணியின் தம்பி சுர்ஜித் (23), கவினைப் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறி, நயவஞ்சகமாக, வெளியே அழைத்துச் சென்றதாகவும் அங்கேயே கண்ணில் மிளகாய்ப் பொடி தூவி மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து வெட்டி, படுகொலை செய்திருக்கிறார்.

சிசிடிவி கண்காணிப்பு கேமரா இல்லாத இடமாகப் பார்த்து இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. எனவே இதற்குப் பின்னணியில் இருந்த கூட்டுச்சதிக்காரர்கள், கூலிப்படையினர் குறித்தெல்லாம் விரிவான விசாரணை தேவையாகும். ஒரு தொழில் முறைக் குற்றவாளியைப் போல மரணத்தை விளைவிக்கும் வெட்டுகள் அவர் கழுத்தில், இன்ன பிற இடங்களிலும் அழுத்தமாகப் பதிந்திருப்பதன் மூலம் இது



உறுதிப்படுகிறது.

## சாதி பெருமிதம் அல்ல வெறி!

சாதிப் பெருமிதத்தின் முக்கியமான அம்சமாக, சாதி மறுப்புத் திருமணத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்கிறார்கள். சாதியப் படிநிலையில் தங்களைவிட கீழே உள்ள சாதியினர் தங்கள் சாதியைச் சீரழிக்க, தங்கள் சமூகப் பெண்ணைக் காதலித்து ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லி கோபத்தை மூட்டுகிறார்கள். அதன்மூலம் தங்கள் சாதியினரை உளவியல் ரீதியாகத் திரட்டுகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பல நிகழ்வுகளில் இதுபோல பேசப்படுவது சமீப நாட்களில் அதிகரித்திருக்கிறது என்பதே உண்மை!

சாதியப் படிநிலையில் தங்கள் சமூகத்திற்குக் கீழே உள்ள ஆண்கள், தங்கள் சமூகப் பெண்களைக் காதலித்து ஏமாற்றுகிறார்கள் என்பதை அடிப்படையாக வைத்துப் படம் எடுப்பதும். சாதிய, அரசியல் தலைவர்கள் பேசுவதும் சமீப காலங்களில் அதிகரித்து வருகிறது. உண்மையில் தங்களது காதலுக்காக அவர்கள் உயிரையே துறக்கிறார்கள் அல்லது படுகொலை செய்யப்படுகிறார்கள்.

## பலியாகும் பள்ளி மாணவர்கள்!

தென் மாவட்ட, பள்ளி மாணவர்கள் மத்தியில் சாதிய உணர்வு அதிகரித்து வருகிறது ஒவ்வொரு சாதியைச் சார்ந்த மாணவர்களும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள தங்கள் கைகளில் வண்ணக் கயிறுகளைக் கட்டிவிடும்பழக்கம்பிடித்து ஆட்டி வருகிறது. இதனைத் தடுக்கும் முகமாக தமிழ்நாடு அரசு நீதியரசர் சந்துரு தலைமையில் ஒரு குழுவை அமைத்து அதன் பரிந்துரைகளை அமல்படுத்த முயற்சித்தது. அந்தக் குழுவின் அறிக்கையின்படி இதைத் தடை செய்ய வேண்டும் என்று மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியது. இதை முதலில் கண்டித்தது பாரதிய ஜனதா கட்சியின் எச்.ராஜாவும், அதன் அன்றைய மாநிலத் தலைவர் அண்ணாமலையும் தான்! இவர்கள்தான் இந்துக்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் பாதிக்கப்பட்ட பட்டியலின மக்களுக்காக எங்கும் குரல் கொடுக்காதவர்கள், எந்தப் போராட்டங்களும் செய்யாதவர்கள். ஆக இவர்கள் போட்ட விதைதான் இப்போது சாதிவெறி விருட்சமாக வளர்ந்து, படர்ந்து நிற்கிறது.

இந்தப் பிரச்சினையின் சூடு குறைவதற்கு முன்பு பன்னிரண்டாம் வகுப்பு மாணவன் ஒருவன் தனது பள்ளி சக மாணவியிடம் பேசிய குற்றத்திற்காக அதே பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வரும் அந்த மாணவியின் தம்பி தனது சக சாதியைச் சார்ந்த நான்கு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு போய் ஆயுதங்களால் தாக்கியுள்ள செய்தி மிகப் பெரும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி உள்ளது.

## புதிய வகையிலான சிறார் குற்றங்கள்!

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பட்டியலினத்தைச் சார்ந்த பள்ளி மாணவனது அணி, கபடிப் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டது. தேர்வுக்காகப் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது அவரது நண்பனே நயவஞ்சகமாகப் பேசி, கீழே இறக்கி, ஒரு முட்புதருக்கு அருகே அழைத்துச் சென்று அங்கு மறைந்திருந்த கும்பலுடன் இணைந்து வெட்டிச் சாய்த்த சம்பவம் நடைபெற்றது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் இருந்த அந்த மாணவர் இப்போது நலம் பெற்றுத் திரும்பியுள்ளார். குற்றவியல் சட்டங்களில் அடிப்படையில் சிறார்களைச் சேர்க்க முடியாது என்பதை உணர்ந்து இப்படி 17 வயதுக்குட்பட்ட படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களை சாதியத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தும் போக்கும் ஒரு புதிய வகையிலான குற்ற நடவடிக்கையாக மாறி வருகிறது. இதனை முளையிலேயே கிள்ள தமிழ்நாடு அரசு தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## அணிவகுக்கும் ஆணவப் படுகொலைகள்!

நாடு முழுக்க இப்படியான குற்றங்கள் நிகழ்கின்றன. தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, 2021இல் ஆணவக் கொலை உள்ளிட்ட குற்றங்களின் எண்ணிக்கை 33 ஆக இருந்த நிலையில், 2024இல் 251 ஆக அதிகரித்திருக்கிறது. தமிழ்நாட்டில் 51 க்கும் மேற்பட்ட ஆணவப் படுகொலைகள் நடைபெற்றுள்ளதாகப் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் சொல்லி வருகின்றன.

இப்படிப்பட்ட குற்றங்களை, பதிவு செய்யும் வாய்ப்பு குறைவு என்பதால், இந்த எண்ணிக்கைஇன்னும்அதிகமாகஇருக்கும் என்றே சமூகச் செயல்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். மனித வளத்துக்கு அடிப்படையான இளைஞர்கள் ஒருபக்கம் சாதி வெறியால் கொல்லப்படுவதும், இன்னொரு பக்கம் அத்தகைய குற்றத்துக்காகச் சிறையில் காலம் தள்ளுவதும் ஒரு பெரும் சமூக அவலம்.

இந்தப் பிரச்சினைக்குச் சட்டம் ஒழுங்கு தொடர்பான தடுப்பு நடவடிக்கை மட்டுமல்லாமல், சமூக அறிவியல் தளத்திலான பரப்புரைப் பணிகளும் கட்டாயம் தேவை. ஒரு காலத்தில் தர்மபுரி, உசிலம்பட்டி பகுதிகளில் அதிகம் நிகழ்த்தப்பட்ட பெண் சிசுக் கொலைகள், விழிப்புணர்வுப் பரப்புரைகளால்தான் குறைந்தது. அதேவிதமான முன்னெடுப்புகள் சாதி ஆணவக் கொலைத் தடுப்புக்கும் அவசியம். சக மனிதர்களை, பெண்களை மதிக்கிற, பண்பாட்டை வளர்த்தெடுப்பதற்கு இவையெல்லாம் இன்று உடனடித் தேவையாக இருக்கிறது.

தொடர்ச்சியாக இடதுசாரி கட்சிகளும், பல சமூகச் செயல்பாட்டாளர்களும் வலியுறுத்தி வருவதைப் போல, சாதி ஆணவக் கொலைகளுக்கு எதிராகத் தனிச்சட்டம் உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்த போது ஏற்கனவே இயற்றப்பட்ட தலித் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. ஆனால் தொடரும் ஆணவப் படுகொலைகளைப் பார்த்த உச்ச நீதிமன்றம் இதற்கான தீர்வாகக் கடுமையான தண்டனைகளோடு கூடிய புதிய சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்று வழிகாட்டி உள்ளது. ஏற்கெனவே இருக்கும் சட்டங்கள் போதும் என்று அரசு இன்னும் கருதிக்கொண்டிருக்கக் கூடாது. தனிச்சட்டங்கள் மூலம் சாதி ஆணவக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள், அதை ஆதரிப்பவர்கள் என அனைவர் மீதும் உறுதியான சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டால்தான் சமூக அளவிலும் மாற்றங்களை எதிர்பார்க்க முடியும். எனவே தமிழ்நாடு அரசு காலம் தாழ்த்தாது உடனடியாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து சாதி, மதவெறி சக்திகளின் கொட்டத்தை அடக்க வேண்டும்!

தொடர்புக்கு 9444481703

### கட்டுப்பாடற்ற சமூக வலைத்தளங்கள்!

தன் அக்காவுடன் கவின் பழகுவது பிடிக்காததால் வெட்டிக் கொன்றதாக சுர்ஜித் அளித்துள்ள வாக்குமூலம், இது ஒரு சாதி ஆணவக் கொலை என்பதை உறுதிப்படுத்துகிறது.

சமூக வலைத்தளங்களில் முற்போக்கான கருத்துக்கள் சொன்னால் கூட சமூக தரக்கட்டுப்பாட்டுக்கு எதிரானது எனத் தடை செய்யப்படுகின்றன. ஆனால் இன்ஸ்டாகிராமில் சுர்ஜித் தொடர்ந்து அரிவாளோடும், கொலைக் கருவிகளோடும் போஸ் கொடுப்பது தொடர்ச்சியாக இருந்துள்ளது. இதனை எப்படித் தடை செய்யாமல் இருந்தது அந்நிறுவனம்?

## அருட்சகோதரிகள் கைது

# அரசமைப்பின் மீதான தாக்குதல்...



மு.அ.பாரதி

**கேரள மாநிலம், சைரோ மலபார் தேவாலயத்தைச் சேர்ந்த அருட் சகோதரிகள் பிரீத்தி மேரி, வந்தனா பிரான்சிஸ் ஆகிய இரண்டு கன்னியாஸ்திரிகள் மற்றும் சுஷ்மான் மண்டவி உள்ளிட்ட மூன்று பேர் மதமாற்றம் மற்றும் ஆள்கடத்தல் குற்றச்சாட்டுகளுக்காக 25.07.2025 அன்று சத்தீஸ்கர் மாநிலம் துர்க் ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.**

கன்னியாஸ்திரிகள் இருவரும் ஆலப்புழாவில் உள்ள சேர்த்தலாவைத் தலைமையிடமாகக் கொண்ட அசிசி சகோதரிகள் மேரி இம்மாகுலேட் அமைப்பைச் சேர்ந்தவர்கள். சுஷ்மான் மண்டவி என்பவர் மதமாற்றம் செய்யப்பட்டு, கடத்தப்பட முயன்றதாகக் கூறப்படும் பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணின் உறவினராவார்.

நாராயண்பூர் பகுதியிலிருந்து மூன்று பெண்களை வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்து, அவர்களைக் கடத்த முயன்றதாக பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அளித்த புகாரின் சத்தீஸ்கர் மத சுதந்திரச் சட்டத்தின் பிரிவு 4 மற்றும் பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் பிரிவு 143இன் கீழ் இவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும், அந்த மூன்று பழங்குடி பெண்களின் குடும்பத்தினரும் அவர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவலை மறுத்துள்ளனர். கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் பழங்குடி பெண்களிடம் விசாரணை மேற்கொள்ளபட்டதாக சட்டீஸ்கர் மாநில பிஜேபி அரசின் காவல்துறை கூறியிருந்த நிலையில், தங்களிடம் கட்டாயப்படுத்தி வாக்குமூலம் பெறப்பட்டதாக அப்பெண்கள் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்துள்ளனர்.

பெற்றோரின் சம்மதத்துடன், தனது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தங்களது பயணம் இருந்ததாகவும் பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்த ஜோதி ஷர்மா என்பவர் தன்னைத் தாக்கியதாகவும், துர்க்கில் உள்ள அரசு ரயில்வே காவல்துறை அதிகாரிகள் தனது வாக்குமூலத்தை முறையாகப் பதிவு செய்யவில்லை என்றும் பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த அப்பெண் குற்றம்சாட்டியுள்ளார். தனது வாக்குமூலத்தை முறையாகப் பெற மறுத்த ரயில்வே காவல்துறை அதிகாரிகள் பஜ்ரங்தள் உறுப்பினர்கள் கொடுத்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாக கூறியுள்ளார். பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்த ஜோதி ஷர்மா என்பவர் தன்னை அச்சுறுத்தி, தாக்கி, தனது வாக்குமூலத்தை மாற்றிக் கொடுக்கச் சொன்னார் என்று அப்பெண் ஊடகத்திற்குப் பேட்டி அளித்துள்ளார்.







மேலும், தயவுசெய்து கைது செய்யப்பட்ட மூன்று பேரையும் உடனே விடுவியுங்கள். அவர்கள் அப்பாவிகள் என்றும் கூறியுள்ளார். மதமாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படுபவர்களின் உறவினரான சிறையில் இருக்கும் சுஷ்மான் மண்டவி, பஜ்ரங் தள நிர்வாகிகள் தன்னைக் கொடூரமாகத் தாக்கியதாகவும், காவல் துறையினர் முன்பு பஜ்ரங் தள உறுப்பினர்கள் வழக்கு ஆவணங்களைச் சரிபார்த்தனர் என்றும், தாங்கள் மதம் மாற்றியதாக ஒப்புக்கொள்ளும்படி தொடர்ந்து கன்னியாஸ்திரிகளை மிரட்டினர் என்றும் தெரிவித்துள்ளார். இந்தப் பேட்டியின் மூலம் கேரள கன்னியாஸ்திரிகள் மீதான புகார் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறது.

சிபிஐ நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்தோஷ் குமார், சிபிஐ (எம்) நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ், கேரள காங்கிரஸ் (எம்) ஜோஸ்.கே.மணி உள்ளிட்டோர் அடங்கிய தூதுக்குழுவினர் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் ஆனி ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர் பிருந்தா காரத் ஆகியோரும் சட்டீஸ்கர் மாநிலம், துர்க் மத்திய சிறைச்சாலையில் அருட் சகோதரிகள் பிரீத்தி மேரி, வந்தனா பிரான்சிஸ் மற்றும் சுஷ்மான் மண்டவி ஆகியோரைச் சந்தித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

இது முழுக்க முழுக்கப் பொய் வழக்கு என்றும், கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் மூன்று பழங்குடி பெண்களும் ஆக்ராவில் உள்ள ஒரு கான்வென்ட்டில் வேலை செய்வதற்காக ரயிலில் சென்றுகொண்டிருந்தனர் என்றும், அவர்களை வரவேற்க கன்னியாஸ்திரிகள் துர்க் ரயில் நிலையத்திற்குச் சென்றிருந்தனர் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்தோஷ் குமார் தெரிவித்துள்ளார். முதலில் மதமாற்ற வழக்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட பெண்கள் கிறிஸ்தவர்கள் என்று தெரிந்தவுடன் மனிதக் கடத்தல் என்று வழக்கு மாற்றப்பட்டது என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆனி ராஜா குற்றம்சாட்டினார்.

இந்தியாவின் அடிப்படை உரிமைகள் என்பது இந்திய அரசியல் சாசனம் தனது மூன்றாவது பகுதியில் வழங்கியுள்ள உரிமைகளுக்கான சாசனமாகும். இந்தப் பகுதி இந்திய நாட்டின் குடிமக்கள் என்ற முறையில் அமைதியான முறையிலும் இணக்கத்துடனும் வாழ்வை மேற்கொள்ளத் தேவையான குடிமையியல் சுதந்திரங்களை இந்தியர்களுக்கு வழங்குகிறது. இந்த உரிமைகள் மறுக்கப்படுவதோ அல்லது மீறப்படுவதோ கூடாது. ஆனால், பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த பெண்களிடமிருந்து இந்த உரிமைகளை பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்த ஜோதி ஷர்மா உள்ளிட்டோர் பறித்துள்ளனர். இதற்கு சட்டீஸ்கர் மாநில பிஜேபி அரசு துணையாகச் செயல்பட்டுள்ளது.



கன்னியாஸ்திரிகள் மீதான கைது நடவடிக்கை முதற்கட்ட விசாரணை இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது என்றும், துர்க்கில் ரயில்வே காவல்துறை பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றும், கன்னியாஸ்திரிகள் தரப்பு வழக்கறிஞர் டமஸ்கர் டாண்டன் கூறியுள்ளார். மேலும், மூன்று பெண்களும் பெரியவர்கள், மேலும் அவர்கள் பணிக்குச் செல்வதற்கு அவர்களது குடும்பத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர். மாநில பிஜேபி அரசின் அழுத்தத்தின் பெயரில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அடிப்படை வசதி இல்லாமல் சிறையில் தொடர்ந்து சித்ரவதையை எதிர்கொள்ளும் இளைஞர் சுஷ்மான் மண்டவியை வேறு அறைக்கு மாற்றுமாறு சிறைக் கண்காணிப்பாளரிடம் சிபிஐ நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்தோஷ் குமார், சிபிஐ (எம்) நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ், கேரள காங்கிரஸ் (எம்) ஜோஸ்.கே.மணி உள்ளிட்டோர் அடங்கிய தூதுக்குழு வலியுறுத்தியுள்ளது. மூட்டு வலி மற்றும் உடல் நலமின்மையால் பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரிகளுக்கு உடனடியாக மருந்து மற்றும் படுக்கைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் இடதுசாரி தூதுக் குழுவினர் கோரினர். கன்னியாஸ்திரிகளைத் தாக்கியவர்கள் மீது விரைவில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று சிபிஎம் மூத்த தலைவர் பிருந்தா காரத் வலியுறுத்தினார். அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய உரிமைகளை சத்தீஸ்கர் மாநில பிஜேபி அரசு தூக்கி எறிந்து விட்டது என்று சிபிஎம் மக்களவை உறுப்பினர் கே.ராதாகிருஷ்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்நிலையில் அருட் சகோதரிகள் பிரீத்தி மேரி, வந்தனா பிரான்சிஸ் ஆகிய இரண்டு கன்னியாஸ்திரிகள் மற்றும் சுஷ்மான் மண்டவி உள்ளிட்ட மூவருக்கும் என்.ஐ.ஏ., சிறப்பு நீதிமன்றம் ஒன்பது நாட்கள் சிறைவாசத்திற்குப் பிறகு நிபந்தனை ஜாமீன் வழங்கி விடுவித்துள்ளது. சிறையில் இருந்து வெளியே வந்த அருட் சகோதரிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆனி ராஜா, சிபிஐ நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்தோஷ் குமார், சிபிஐ (எம்) நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர் பிருந்தா காரத் உள்ளிட்டோர் வரவேற்றனர். மேலும் வழக்கை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்றும், பொய்ப் புகார் அளித்த பஜ்ரங் தள உறுப்பினர்கள் மற்றும் துணைபோன காவலர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி யுள்ளது.

தொடர்புக்கு: 9865370777

இளைஞர் விரோதச் சக்திகளை இடுப்பொடித்து விரட்டுவோம்!
மாணவர் விரோதச் சக்திகளை மண்டையில் அடித்து விரட்டுவோம்!
அணி திரண்டு வாரீர் சேலம் நோக்கி!

# நூல் வெளியீட்டு விழா அல்ல, மாநாடு

## த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்புரை

‘காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூல் வெளியீட்டு விழா சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற்றது. இதில் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்புரை ஆற்றினார். அப்போது,



“காலம்தோறும் கம்யூனிஸ்டுகள் – என்ற இந்தப் புத்தக வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்பது வரலாற்றுக் கடமை என்று கருதி கடைக்கோடி மாவட்டத்தில் இருந்துகூட வந்திருக்கின்றனர்.

இது நூல் வெளியீட்டு விழா மட்டுமல்ல, தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நாள் என்ற உணர்வோடு அவர்கள் வந்திருக்கின்றனர். இது புத்தகத்தைக் கொண்டாடும் நாள். புத்தகத்தை மட்டுமல்ல, தத்துவத்தையும் சேர்த்து கொண்டாடும் நாள் என்ற உணர்வோடு வந்திருக்கின்றனர்.

மாபெரும் கவிஞர் தமிழ்ஒளியின் நூல் தொகுப்புகளை, அண்மையில் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வெளியிட்டு அற்புதமான உரையை ஒரு மணி நேரம் நிகழ்த்தினார். ஒரு சிறந்த புத்தக வாசகர். அவர் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

மரியாதைக்குரிய கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் 18 ஆண்டுகளுக்கு முன்பு, 2007ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஒன்றரை மணி நேரம் உரை நிகழ்த்தினார். ‘உயிரின் சுவாசமல்லவா புத்தகம்‘ என்பது தலைப்பு. வ.உ.சி.பூங்காவில் 10ஆயிரம் பேர் முன்பு அவர் உரையாற்றினார்.

மீண்டும் 10 ஆண்டுகள் கழித்து 2017ல் ‘அறிவே கடவுள்’ என்ற தலைப்பில் ஒன்றரை மணி நேரம் உரையாற்றினார். ‘இலக்கியத்தில் நாகரிகம்‘ என்ற தலைப்பில் இன்னொரு முறை உரை நிகழ்த்தினார்.

நாங்களெல்லாம் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலம் 1983ஆம் ஆண்டு, காரல் மார்க்ஸ் நினைவு நூற்றாண்டு. அப்போது ‘மானுட நதிகள் எல்லாம் மார்க்சை நோக்கி’ என்று ஒரு கவிதையை கவிரப்பேரரசு வைரமுத்து எழுதியிருந்தார். நீண்ட கவிதை, அந்தக் கவிதையை நாங்கள் படித்துப் பரவசமானோம். ‘மானுட நதிகள் எல்லாம் மார்க்சை நோக்கி’ என்ற கவிதை அது. அப்போது அவருக்கு வயது 30.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் புத்தகத்தை நேசிப்பவர். ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஆறு முறை புத்தகங்களைப் பற்றி பேசியவர். அவரை உங்கள் அனைவரின் சார்பில் நெஞ்சார வரவேற்கின்றோம்.

மரியாதைக்குரிய மாநிலச் செயலாளர் தோழர் இரா.முத்தரசன் அவர்களையும், மரியாதைக்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி யினுடைய மாநிலச் செயலாளர் தோழர் பெ.சண்முகம் அவர்களையும் நாம் இந்த இடத்திலே பார்க்கிற பொழுது இரண்டு பேரும் சிவப்புத் துண்டு போட்டு, இரண்டு இடங்களிலே அமர்ந்திருக்கின்றனர். இரண்டு பேரும் ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள், ஆளும் ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள். எளிமைக்கும் இரண்டு பேரும் உதாரணமாகத்தான் இருக்கிறார்கள். இரண்டு பேரும கிராமப்புறத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள். இரண்டு பேரும் தமிழ் மண்ணை அடையாளப்படுத்துபவர்கள்.

நாம் அத்தனை பேரும் விரும்புவது இரண்டு பேரும், என்றாவது ஒன்றாக, ஒரே கொடியைப் பிடித்து நில்லுங்கள்.

காலம்தோறும் கம்யூனிஸ்டுகள் நூலில், எந்த இடத்திலும் சார்புத்தன்மை இல்லாமல் வரலாறை வரலாறாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வரலாறு வரலாறுதான். வரலாறை வளைப்பதற்கோ, ஒளிப்பதற்கோ யாருக்கும் உரிமை இல்லை.

கவிஞர் கே.ஜீவபாரதி இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். அவர் எழுதியதும், தொகுத்ததும் நூறு நூல்களுக்கும் மேல் இருக்கும். ஜீவபாரதி ஜனசக்தியில் பணியாற்றிய போது, 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு கம்யூனிஸ்டுகளுடைய வரலாற்றை கிராமம் கிராமமாகச் சென்று திரட்டி ஜனசக்தியில் எழுதினார். பின்னர் அதனைத் தொகுத்து நூலாக வெளியிட்டார். அவரால் இன்று வர இயலவில்லை. ஆனாலும் அவருக்கு அனைவரும் சேர்ந்து பாராட்டைத் தெரிவிப்போம்,

இந்த நூறு பேர் அடையாளமாக, நம்முடைய மூத்தவர்கள், முன்னோடிகளாக, நம்முடைய வழிகாட்டிகளாக பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அடுத்தடுத்து பதிவுகள் வர இருக்கின்றன.

எல்லா தியாகிகளும் பதிவுசெய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத்தினுடைய திட்டம். இன்னொரு செய்தி, இந்த நிகழ்ச்சி மாநாடு போல் அமைந்ததற்கு காரணம், ஒன்று இந்தியப் பொதுவுடைமை இயக்கத்துக்கு இது நூற்றாண்டு. இரண்டாவது நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்துக்கு இது 75ஆவது ஆண்டு, பவள விழா ஆண்டு. இந்த இரண்டு பெரும் சிறப்புகளுடன், இந்தப் புத்தகத்தை வெளியிடுவது மட்டற்ற மகிழ்வளிக்கிறது” இவ்வாறு த.ஸ்டாலின் குணசேகரன் குறிப்பிட்டார்.

# கொள்கைக்கேற்ப வாழ்பவர்கள்

## தவத்திரு குன்றக்குடி

சைவ சித்தாந்தமும் மார்க்சியமும் வேறுபாடற்ற சமுதாயத்தைப் படைக்க விரும்புகிறது. ஒரே ஒரு வேறுபாடு, சைவ சித்தாந்தம் கடவுளை நம்புகிறது. மார்க்சியம் விலகி நிற்கிறது என்று ‘காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூல் வெளியீட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசினார்.



அவர் உரை வருமாறு:

“நெஞ்சுக்கு நீதியில் கலைஞர் பதிவு செய்கிறார் ‘‘நான் பெரியாரைப் பார்க்காமல் இருந்தால், அண்ணாவைப் பின்பற்றாமல் இருந்தால், நானும் ஒரு கம்யூனிஸ்டாகவே வாழ்க்கையை நடத்தியிருப்பேன்’’ என்று.

கலைஞர் கருணாநிதி 15 உறுப்பினர்களுடன் சட்டமன்றத்திற்குள் முதல்முறையாக நுழைகிறார். அண்ணாவும் இருக்கிறார். கலைஞர் கன்னிப் பேச்சு பேச வேண்டும். அன்றைக்கு எதை வேண்டுமானாலும் பேசியிருக்கலாம். ஆனால் நங்கவரம் பண்ணை குறித்து கலைஞர் பேசினார். ஏழை மக்களுக்கு, பாட்டாளிகளுக்கு, உழைக்கும் உழவர் தொழிலாளர்களுக்கான வரலாற்றுப் பேச்சாக அது அமைந்தது. அதை நெஞ்சுக்கு நீதியில் பதிவு செய்கிறார்.

பின்னாளில், 1996ஆம் ஆண்டில் ஆட்சி அமைந்தவுடன், முதலில் கொண்டு வந்தது உழவர் சந்தை என்கிற அற்புதத் திட்டம்.

இனிக்கும் கரும்பைப் பயிரிட்டவன் கசந்து போய்க் கிடக்கிறானே, புத்துணர்வு தரும் தேயிலையைப் பயிரிட்டவன் சோர்ந்து போய்க் கிடக்கிறானே, தேங்காயைப் பயிரிட்டவன் தேங்காய்க்குள் இருக்கும் நீரைப் போலக் கண்ணீரைச் சிந்துகிறானே, இந்த உழவனின் வாழ்வு எப்போது மாறுவது?

சாலையோரத்தில் தேநீர்க் கடை நடத்துகிறவன் கூட, அவன் விற்கும் பண்டங்களுக்கு அவன்தான் விலை நிர்ணம் செய்கிறான். ஆனால், அந்தோ! பரிதாபம், ரத்தத்தை வியர்வையாக்கி உழைக்கும் விவசாயத் தோழர்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களுக்குத் தாங்களே விலை நிர்ணயம் செய்ய முடியாமல் தடுமாறுகிறார்களே, ஏமாறுகிறார்களே, இதைத் தீர்க்க வேண்டுமே என்று கலைஞர் கொண்டு வந்த திட்டம்தான் உழவர் சந்தை என்ற அற்புதத் திட்டம்.

கீழ்வெண்மணி கொடுமை நிகழ்ந்த போது அங்கு சென்ற ஒரே மடாதிபதி குன்றக்குடி அடிகளார்தான்.

இந்திய நாகரிகத்தின் மணிமுடிதான் சைவசித்தாந்தம். இந்த சைவ சித்தாந்தத்தையும் மார்க்சியத்தையும் இரு கண்களாக் கருதியவர் குன்றக்குடி அடிகளார். அவர் இதைப் பற்றி ஆழமான கட்டுரை எழுதியிருக்கிறார்.

சைவ சித்தாந்தமும் மார்க்சியமும் ஓர் ஒப்பீடு என்பது அதன் தலைப்பு. ஆன்மிகத் தளத்தில் நின்று வேறுபாடற்ற சமுதாயத்தைப் படைக்க விரும்புகிறது சைவ சித்தாந்தம். அதுபோல்தான் மார்க்சியமும் வேறுபாடற்ற சமுதாயத்தைப் படைக்க விரும்புகிறது. ஒரே ஒரு வேறுபாடு, சைவ சித்தாந்தம் கடவுளை நம்புகிறது. மார்க்சியம் அதை விட்டு விலகி நிற்கிறது.

ஐன்ஸ்டீனுக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டது எதற்கு? சார்பியல் கோட்பாடுக்காக(theory of relativity) கொடுக்கப்பட்டது. ஐன்ஸ்டீனுக்கு எங்கு பார்த்தாலும் பாராட்டுகள், விருதுகள், கொண்டாட்டம்.

களைத்துப் போயிருந்த ஐன்ஸ்டீன், ஒரு விழாவில் கடைசி இருக்கையில் போய் உட்கார்ந்தார். தன்னைப் போல் இருக்கும் ஓட்டுநரிடம், “இன்று என்னால் மேடைக்கு வரமுடியாது. எனக்குப் பதிலாக நீ மேடைக்குப் போ, விருது கொடுப்பாங்க அதை வாங்கிட்டு வந்திடு. அதுவரை நான் ஓய்வெடுக்கிறேன்” என்றார்.

ஐன்ஸ்டீனின் ஓட்டுநர் ஐன்ஸ்டீனைப் போன்ற தோற்றம் கொண்டவர். டூப்ளிகேட் ஐன்ஸ்டீன் மேடைக்குச் செல்கிறார். பரிசு அறிவிக்கும் நேரத்தில், கூட்டத்தில் இருந்து ஒருவர் எழுந்து, “கொஞ்சம் நில்லுப்பா, எதுக்கு உனக்குப் பரிசு தர்றாங்க. சார்பியல் கோட்பாட்டில் $E=Mc^2$ எப்படி வரும்? $E = Mc^3$ தான் வரும். $Mc^2$ எப்படி வரும் என்பதை நிரூபணம் செய்துவிட்டு பரிசை வாங்கு” என்றார்.

ஓட்டுநர் ஐன்ஸ்டீன் பதற்றப்படவே இல்லை. தூங்கிக்கொண்டிருந்த ஐன்ஸ்டீன் பதற்றமடைகிறார். ஆனால் ஓட்டுநர் ஐன்ஸ்டீன், “இதென்ன பெரிய கேள்வி, இதோ என் ஓட்டுநர் வருகிறார். அவர் பதில் சொல்வார்” என்றார். இதற்குப் பெயர்தான் பிரசன்ஸ் ஆஃப் மைண்ட். தயாரித்துக் கொண்டு வந்து பேசுவதல்ல ; காலத்திற்கேற்பப் பேசுவது.

‘காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூலின் இரண்டு தொகுதிகளையும் கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாது. எளிய நடை. பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளன.

கம்யூனிஸ்டுகள் தாங்கள் வாழ்கின்ற நிலைக்கு ஏற்றவாறு சித்தாந்தத்தைத் திரிக்கின்றவர்கள் அல்ல, சித்தாந்தத்திற்கேற்ப வாழ்பவர்கள். அதற்காகத் தங்களையே தியாகம் செய்தவர்கள்.

பகத்சிங் என்பது வெற்றுச் சொல் அல்ல; அது தியாகத்தின் அடையாளம். பகத்சிங்கிற்குத் தூக்குத்தண்டனையை உறுதி செய்து விட்டார்கள். அவரைப் பார்ப்பதற்காக அவருடைய அம்மா தினமும் சிறைக்கு வந்து செல்கிறார். தான் சாகப் போவதை எண்ணி அம்மா கவலைப்படுவார் என்பதால், அவரை இனிமேல் சந்திக்க வேண்டாம் என்று பகத்சிங் நினைத்தார்.

போர்க்குணம் மிக்கவனைப் பெற்ற தாய் அல்லவா, போராடி பகத்சிங்கைச் சென்று சந்திக்கிறாள். “நீ மரணத்தைச் சந்திக்கப் போகிறாய் என்று உன் அம்மா கவலைப்படவில்லை, இப்படி ஒரு வீரத்திருமகனை என் வயிறு பெற்றதே, அந்தப் புனித வயிற்றுக்காக நன்றி சொல்லத்தான் வந்தேன், மகனே” என்றார்.

ஆனால், பகத்சிங்கின் அப்பா “என் மகன் ஊரிலேயே இல்லை” என்று கடிதம் எழுதினார். “அப்பா நீங்கள் துரோகம் செய்து விட்டீர்கள், வேறு யாராவது இப்படிச் செய்திருந்தால் நான் தாங்கிக் கொண்டிருப்பேன். என் அப்பா இப்படியொரு

பசுத்தோல் போர்த்திய புலியா
பா.ஜ.கவைத் தோலுரித்துக்
பெருந்திரளாய் அணி திரண்டு வா

# கம்யூனிஸ்டுகள்

## அடிகளார் சிறப்புரை

காரியத்தைச் செய்து விட்டாரே! அப்பா, இப்படி நீங்கள் எழுதியதற்காக நான் வெட்கப்படுகிறேன்'' என்றார் பகத்சிங்.

''எந்த மரணத்தையும் பரிசாகப் பெறத் தயாராக இருக்கிறேன்'' என்றார் பகத்சிங்.

அவர் கேட்ட பிச்சை என்ன? உயிர் பிச்சை அல்ல; ''என் தாய் மண்ணின் மீது என்னுடைய ரத்தம் சிந்த வேண்டும். என்னைத் தூக்கிலிடக் கூடாது. துப்பாக்கிகளால் என்னுடல் தகர்க்கப்பட வேண்டும். என்னுடைய ரத்தம் தாய்மண்ணில் சிந்த வேண்டும்'' என்று கேட்டவர் பகத்சிங்.

மறுநாள் தூக்குத்தண்டனை, சிறைச்சாலையே அதிர்கிறது. சிறைச்சலையில் ஆறாயிரம் கைதிகள். பலதரப்பட்டவர்கள். ஒற்றைக்குரல் சிறைச்சுவரில் எதிரொலிக்க, இன்குலாப் சிந்தாபாத், இன்குலாப் சிந்தாபாத் முழக்கம்.

தூக்கிலிடும் முன்பு, ''சீக்கிரம் வா, உன்னைத் தூக்கிலிட வேண்டும்'' என்று சிறை அதிகாரிகள் கதவை வேகமாகத் தட்டினர். எந்தச் சலனமும் இன்றி மிக அமைதியாக, ''ஒரு புரட்சியாளன் இன்னொரு புரட்சியாளனுடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன்'' என்று பகத்சிங் சொன்னான். லெனினின் அரசும் புரட்சியும் புத்தகத்தைப் படித்துவிட்டு தூக்குக் கயிற்றை முத்தமிடச் சென்றான்.

தூக்குக் கயிறு மாட்டப்படுவதற்கு முன்பு ''இன்குலாப்'' என்று பகத்சிங் சொல்ல, ராஜகுருவும் சுகதேவும் ''ஜிந்தாபாத்'' என்று சொன்னார்கள்.

அடுத்து சுகதேவுக்குத் தூக்குக்கயிறு மாட்டப்படுவதற்கு முன்பு, இன்குலாப் என்று சுகதேவ் சொல்ல, ஜிந்தாபாத் என்று ராஜகுரு சொல்வார்.

மூன்றாவதாக ராஜகுருவைத் தூக்கிலிடப் போகின்றனர். ''இன்குலாப்'' என்று ராஜகுரு சொல்கிறார். ''ஜிந்தாபாத்'' என்று சொல்ல பகத்சிங்கும் இல்லை, சுகதேவும் இல்லை.

ஆனால், ராஜகுரு ''இன்குலாப்'' என்று சொன்னவுடன், ''ஜிந்தாபாத்'' என்று ஒலித்தது. அதை முழங்கியது தூக்கிலிட்ட சிறைப் பணியாளர்.

''நான் ஏழெட்டுச் சிறைச்சாலைகளில் வேலை செய்திருக்கிறேன். நூற்றுக்கணக்கான வர்களுக்குத் தூக்குக் கயிற்றை மாட்டி யிருக்கிறேன். ஆனால், இந்த இளம்பிஞ்சுகளுக்கு இப்படிப்பட்ட தண்டனை தருவதற்கு ஆளாகி விட்டேனே'' என்று அந்த சிறைப் பணியாளர் வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதார். இதுதான் தியாகத்தின் வரலாறு. தேசத்தின் விடுதலைக்காகப் பொதுவுடைமையர்கள் எப்படிப் பாடுபட்டிருக்கிறார்கள் என்பதற்கான சான்று.

காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது, ஜீவாவைப் பார்க்கப் போகிறார். தன் கையால் நூற்ற 10 ஆயிரம் கஜம் நூலை காந்தியடிகளுக்கு ஜீவா பரிசாகத் தருகிறார். அப்போது, ''உங்களுடைய சொத்துகள் எவ்வளவு?'' என்று காந்தியடிகள் கேட்கிறார். அதற்கு ''இந்த தேசம்தான் என்னுடைய சொத்து'' என்கிறார் ஜீவா.

அதற்கு, ''இல்லை இல்லை, நீங்கள்தான் தேசத்தின் சொத்து'' என்று உடனே பதில் சொல்கிறார் காந்தியடிகள். காந்தியின் விழியசைவுக்கும், விரலசைவுக்கும் கோடிக்கணக்கான மக்கள் காத்துக்கொண்டிருக்கும் போது ஜீவாவைத் தேடிச் சென்றார் காந்தி.

காந்தி ஜீவா சந்திப்பு நிகழ்ந்த இடத்தில் நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என கலைஞர் காலத்திலேயே கேட்டோம். மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அந்த நினைவுச் சின்னத்தை அமைப்பது வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியது'' என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் உரையாற்றினார்.

– பச்சோ

# வரலாறு இப்படித்தான் எழுதப்பட வேண்டும்!

**மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பேச்சு**

**காலம் தோறும் கம்யூனிஸ்டுகள் நூலில், அனைத்துத் தலைவர்களையும் சமமாகப் பாவித்து, உள்ளது உள்ளபடி வெளியிட்டிருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது என்று, நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பாராட்டுத் தெரிவித்தார். அப்போது...**



''சிறப்பான முறையில், காலத்திற்கும் அழியாமல் இருக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன் 'காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்' என்கிற இந்த நூல் அச்சிடப்பட்டிருக்கிறது. அதனை அழகாகவும், தரமாகவும் அச்சிட்ட நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத்துக்கு முதலில் என்னுடைய பாராட்டுகள்.

இரண்டாவது, இந்த நூலில் உள்ள நூறு தலைவர்களின் புகைப்படங்கள் நம்மிடம் இருக்கலாம், இல்லாமலும் போயிருக்கலாம். ஆனால் அவை அனைத்துப் படங்களும் ஓவியர் அன்பு கைவண்ணத்தில் சிறப்பாக வரையப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது. அதற்காக ஓவியர் அன்புவுக்குப் பாராட்டுகள்.

நூறு ஆண்டு கடந்த இயக்கத்தில் பணியாற்றிய தலைவர்கள், தோழர்கள், தியாகிகளின் வரலாற்றைத் தொகுத்தால், பல தொகுதிகள் வெளிவரும். இந்த மகத்தான செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனமும் செய்திருப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

இந்த நூலில் இடம்பெற்றிருக்கும் பல தலைவர்கள் இப்படி வாழ்ந்தார்களா? என்று இன்றைய தலைமுறையே நம்ப முடியாத அளவுக்குப் பிரமிக்கத்தக்க வாழ்க்கை வரலாற்றை கவிஞர் ஜீவபாரதி சிரமப்பட்டுத் தொகுத்திருக்கிறார்.

சுதந்திரத்துக்கு முன்பும், சுதந்திரத்துக்குப் பிறகும் பல முறை தடைசெய்யப்பட்ட கட்சியாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இருந்திருக்கிறது. கடுமையான அடக்குமுறை, சிறை, சித்ரவதை, தலைமறைவு ஆகிவற்றுக்கு இடையேதான் நம்முடைய தோழர்கள் மக்களிடம் பணியாற்றி இருக்கிறார்கள். இந்த அளவுக்குச் சிறையை, அடக்குமுறையை வேறொரு இயக்கம் இந்தியாவில் எதிர்கொண்டிருக்குமா என்றால், இல்லை என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

ஆகவே, இவ்வளவு தடைகளையும் தாண்டித்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் வளர்ந்திருக்கிறது, செயல்பட்டிருக்கிறது என்பதை, பெருமையோடு இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இந்த நூலில் இடம்பெற்றுள்ள நூறு தலைவர்களில், அருமைத் தோழர் இரா.நல்லகண்ணு மட்டும்தான் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். மீதி 99 பேரும் மக்களிடம் பணியாற்றி வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள் அல்லது காவல்துறையால் சுட்டுக்கொல்லப்பட்டும், அடக்குமுறையால் உயிரிழந்தும் தியாகிகளாக வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்த பிறகும் பெரும் தலைவர்களாக இருந்தவர்களை, எந்தப் பாகுபாடுமின்றி நூலில் பதிவு செய்திருப்பது மற்றொரு சிறப்பு என்பதைப் பெருமையோடு கூற விரும்புகிறேன்.

வரலாறு இப்படித்தான் எழுதப்பட வேண்டும். வரலாற்றிலே ஒருவரை மறைப்பது, ஒருவரை உயர்த்துவது என்பது பொருத்தமானதல்ல. அந்த வகையில் மிகச் சரியான ஒரு செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, குறிப்பாக நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் அனைத்துத் தலைவர்களையும் சமமாகப் பாவித்து, உள்ளது உள்ளபடி இந்த நூலை வெளியிட்டிருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது. அந்த வகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தலைவரின் வாழ்க்கை பெரிது, இன்னொரு தலைவரின் வாழ்க்கை அப்படியல்ல என்று சொல்ல முடியாது.

ஒவ்வொருவரும் அவரவர் காலத்தில், அவரவர் வாழ்ந்த பகுதிகளில் இருந்த நிலைமைக்கேற்பத் தங்களுடைய பணிகளை மக்களுக்கு ஆற்றியிருக்கிறார்கள் என்பதை மிகச்சிறப்பாக இந்த நூல் பதிவு செய்திருக்கிறது. இந்த நூல் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய அரசியல் சமூகப் பொருளாதார வளர்ச்சியைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கும் வாசிக்க வேண்டிய மிக முக்கியமான நூலாக 'காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்' அமைந்திருக்கிறது.

இந்த நூலைப் படிக்கும் போது சிறைகளில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு சீர்திருத்தங்கள், மனித உரிமைகளை மதிக்கக்கூடிய முன்னேற்றங்கள் போன்றவற்றுக்குப் பின்னால் கம்யூனிஸ்டுகளின் அளப்பரிய தியாகம் இருப்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும்.

சிறையிலே இன்னும் ஏராளமான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய இருக்கிறது. எட்டு வழிச்சாலைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன். கழிப்பறைகளுக்குக் கதவுகள் கிடையாது. எல்லாச்சிறையிலுமே கழிப்பறைகளுக்குக் கதவுகள் கிடையாது.

ஐ.ஜி.யாக இருந்த கண்ணப்பன் சிறைக்கு வந்திருந்தார். நான் அவரிடத்திலே சொன்னேன். மலம் கழிப்பது என்பது எவ்வளவு சிக்கலான விஷயம். கழிப்பறைகளுக்குக் கதவுகள் இல்லாததால், மற்றவர்கள் முன்னால் போவது என்பது சங்கடமானது. அவற்றுக்குக் கதவு போடலாமே என்று சொன்னேன். அதற்கு அவர் சொன்னார், ''கதவு போட்டால், உள்ளே பூட்டிக்கொண்டு ஏதாவது செய்து கொண்டுவிடலாம். அதனால்தான் கதவு போடாமல் இருக்கிறோம்'' என்று சொன்னார்.

நான் சொன்னேன், ''நீங்கள் முழுக்கதவு போட வேண்டாம், உட்கார்ந்துதான் போகிறார்கள், யாரும் நின்றுகொண்டு போவதில்லை. இதனால் அரைக்கதவு போடுங்கள். அப்போது நீங்கள் சொல்வது போன்ற சங்கடம், சம்பவம் நடப்பதற்கான வாய்ப்பு இல்லை'' என்று சொன்னேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டார்.

ஆனால், இன்றுவரை அதனை நிறைவேற்றவில்லை. அமைச்சர் அவர்களும் இங்கே இருப்பதால் இதனை நிறைவேற்றப் பரிசீலிக்க வேண்டும். தமிழ்நாடு அரசும் பரிசீலிக்க வேண்டும் என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு வந்திருக்கிற ஆயிரக்கணக்கான தோழர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய நம்முடைய தோழர்களுக்கு அன்பார்ந்த வேண்டுகோள், 'காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்' நூலை நீங்கள் படிப்பது மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் வாய்ப்பிருக்கும் இடங்களில் எல்லாம் நம்முடைய தோழர்களின் தியாகத்தை, சிறைக்கொடுமைகளை அனுபவித்ததை, அடக்குமுறைகளைத் தாங்கிக்கொண்டதை, கடுமையான வறுமையிலும் மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டதை, சமரசமற்றப் போராட்டத்தை வாழ்நாள் முழுவதும் நடத்தியதை மக்களிடம் எடுத்துச் சொல்வதற்கும், இந்த மாபெரும் சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்வதற்குமான பணிகளில் உங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய தலைவர்களின் தியாகத்தை நாம் எடுத்துச் சொல்லவில்லை என்றால், அது காலப்போக்கில் மறைந்துவிடும் ஆபத்து இருக்கிறது. எனவே கம்யூனிஸ்டு கட்சியில் இப்படியெல்லாம் தலைவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்வது நாம் செய்ய வேண்டிய முக்கியமான பணியாகும்.

இவ்வளவு தியாகங்கள் செய்த இயக்கம் ஆல மரமாக, வீரியமாக வளர்ந்திருக்க வேண்டும், வளர வேண்டும். கம்யூனிஸ்டு இயக்கம் இந்தியாவில், தமிழகத்தில் வலுமிக்க இயக்கமாக வளர்வதற்கான முறையில் நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். செங்கொடி இயக்கம் அசைக்க முடியாத இயக்கம் என்கிற நிலை ஏற்பட வேண்டும். இதைத்தான் மறைந்த நம்முடைய தலைவர்கள் எதிர்பார்த்தார்கள்.

இந்தச் சமூகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும், அனைத்து மக்களுக்கும் சுபிட்சமான வாழ்க்கை அமைய வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். இதற்காகத்தான் அத்தனை சித்திரவதைகளையும், அடக்குமுறைகளையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுடைய கனவு நிறைவேற நாம் என்ன செய்ய வேண்டும்? என்று இன்றைய தலைமுறை சிந்திக்க வேண்டும்'' என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் உரையாற்றினார்.

– ந.கதிரவன்





வ.மணிமாறன்

## தர்மஸ்தலா பெருந்திரள் கொலைகள்

# புனிதத்தலமா? புதைகுழியா?

**கர்நாடக மாநிலத்தை மட்டுமல்ல, நாட்டையே உலுக்கி இருக்கின்றன தர்மஸ்தலா பெருந்திரள் கொலைகள் (Mass Killings). இங்கு கொன்று புதைக்கப்பட்ட இடங்களில் தோண்டியெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எலும்புக்கூடுகள், அடையாள அட்டைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

கர்நாடகா மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டத்தில், நேத்ராவதி ஆற்றங்கரையில் உள்ளது தர்மஸ்தலா. இங்குள்ள மஞ்சு நாதர் கோயில் மிகவும் புகழ்பெற்றது. இந்தக் கோயிலின் முன்னாள் தூய்மைப் பணியாளர் அண்மையில் அளித்த வாக்குமூலம், கர்நாடக மாநிலத்தை மட்டுமல்ல நாட்டையே அதிர வைத்துள்ளது.

“1995 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை, பல பெண்கள் மற்றும் மாணவிகளின் உடல்களை அடக்கம் செய்யச் சொல்லி என்னைக் கோயில் நிர்வாகத்தினர் கட்டாயப்படுத்தினர். அதை நான் செய்யவில்லை என்றால் என்னைக் கொன்று விடுவதாக மிரட்டினர். அவர்களில் பள்ளிச் சீருடையில் இருந்த பல பெண்களைப் புதைத்து இருக்கிறேன். அவர்களின் உடலில் பாலியல் வன்முறைக்கான காயங்கள் இருந்தன. சில நேரம் ஆசிட் தழும்புகளும் காணப்பட்டன” இப்படி கோயிலின் முன்னாள் தூய்மைப் பணியாளர் கூறினால் பதற வைக்காதா?

அவர் ஜூலை 11 ஆம் தேதி பெல்தங்கடி நீதிமன்றத்திற்குச் சென்றார். அதுவும் தான் புதைத்த இடம் ஒன்றில் எலும்புகளைத் தோண்டியெடுத்துச் சென்றார். நீதிபதியிடம் எலும்புகளைக் காட்டி, வாக்குமூலம் அளித்தார். தனக்கு மேல் இருந்தவர்கள் தன்னைக் கொன்றுவிடுவதாக மிரட்டியதால், இத்தனை ஆண்டுகள் அமைதியாக இருந்ததாக அந்த முன்னாள் தூய்மைப் பணியாளர் சொல்கிறார். அவருடைய அடையாளம், பெயர் மற்றும் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

“2010ல் நடந்த ஒரு சம்பவம் இன்றும் நினைத்தாலே என்னுடைய மனம் பதறுகிறது. கலையரி பெட்ரோல் நிலையத்தில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில், ஒரு இடத்திற்கு என்னைக் காவல்துறையினர் அழைத்துச் சென்றனர். அங்கு 12 முதல் 15 வயதுக்குட்பட்ட ஒரு சிறுமியின் உடலைப் பார்த்தேன். உடலில் குறைவான ஆடைகளே இருந்தன, பாலியல் வன்முறைக்கு உள்ளான அடையாளங்கள் தெளிவாகத் தெரிந்தன. கயிற்றால் இறுக்கிய தடயங்கள் சிறுமியின் கழுத்தில் இருந்தன. குழி தோண்டி அந்தச் சிறுமியைப் புதைத்து விடு, அதனுடன் அவருடைய பள்ளிப் புத்தகப் பையையும் போட்டுவிடு என்று என்னிடம் கூறினர். அந்தக் காட்சி என் கண்களைவிட்டு இன்னும் அகல மறுக்கிறது” என்று அந்தத் தூய்மைப் பணியாளர் கூறியது முதல் தகவல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.





தர்மஸ்தலா கோயிலில் பாலியல் வன்கொடுமைகள், கொலைகள் நடந்ததாகப் பலமுறை புகார்கள் வந்துள்ளன. 1987ல், 17 வயதுச் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த அந்தப் பகுதி மக்கள், தர்மஸ்தலா கோயில் நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். 2003ல் ஒரு மருத்துவ மாணவி காணாமல் போனது தொடர்பாகவும் போராட்டங்கள் நடந்தன. 2012ல் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி 17வயதுச் சிறுமியை கொன்றுவிட்டதாக, அதன் பெற்றோர் தர்மஸ்தலா கோயில் நிர்வாகம் மீது புகார் கூறினர். இது கர்நாடக மாநிலத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

அப்போது, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, தாக்குதல் மற்றும் கொலைகள் குறித்து விசாரிப்பதற்காக வி.எஸ்.உக்ரப்பா தலைமையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிடம் தட்சிண கன்னடா மாவட்டக் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், “ஒவ்வொரு ஆண்டும் தட்சிண கன்னடா மாவட்டத்தில் மட்டும் 100 பெண்களின் இயற்கைக்கு மாறான மரணங்கள் பதிவாகின்றன” என்று கூறினார். அதே மாவட்டத்தில், 402 பெண்கள் மாயமான வழக்குகளும், 106 பாலியல் வன்கொடுமை வழக்குகளும் பதிவாகியுள்ளன.” என்று வி.எஸ்.உக்ரப்பா தெரிவித்துள்ளார்.

தர்மஸ்தலா பகுதியில் ஒருவர் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார். 13 ஆண்டுகளாக இந்த வழக்கை நடத்திவரும் மகேஷ் ஷெட்டி திமரொடி என்பவர், “சிறு வயதிலிருந்தே இங்கு குற்றங்கள் நடப்பதைப் பார்த்து வருகிறேன். காடுகளில் அழுகிய உடல்கள் எத்தனை தெரியுமா? சாலைகளில் புதைக்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கை தெரியுமா?” என்று வேதனையுடன் கேள்வி எழுப்புகிறார்.

இதேபோன்று “இங்கு நடந்த நூற்றுக்கணக்கான பாலியல் துன்புறுத்தல் மற்றும் கொலைகள் குறித்து வழக்குகூட பதிவு செய்யப்படவில்லை” என்று ஓய்வு பெற்ற காவல் அதிகாரி ஒருவர் கூறியிருப்பது மேலும் அதிர்ச்சி அளிக்கிறது.

இந்த நிலையில், தர்மஸ்தலா கோயிலில் பணியாற்றிய முன்னாள் துப்புரவுப் பணியாளர் வாக்குமூலம் அளித்திருப்பது பல உண்மைகள் வெளிவருவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. அரசும் வேறு வழியின்றிச் சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) ஒன்றை அமைத்தது. இந்தக் குழு, ஆகஸ்ட் 6 ஆம் தேதி வரை 14 இடங்களில் தோண்டி ஆய்வு மேற்கொண்டது, இதில் ஏராளமான எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அடையாள அட்டை, பான் கார்டு, மக்கிப் போகாத பைகள், சேலைத்துண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவை தடயவியல் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை குறித்து தர்மஸ்தலா கோயில் நிர்வாகம் எதுவும் பேசவில்லை. மவுனம் காத்தது. சிறப்பு விசாரணைக் குழு (எஸ்.ஐ.டி) அமைக்கப்பட்ட பிறகு, விசாரணைக்கு ஒத்துழைப்பதாகவும், நியாயமான முறையில் விசாரணை நடைபெற வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தது. அதேநேரத்தில், இதுகுறித்த செய்திகளை வெளியிடக் கூடாது என நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது. 14 இடங்களைத் தோண்டியதில் எலும்புகள் கண்டெடுக்கப்பட்ட பிறகு, நீதிமன்றம் தடையை விலக்கியது.

தர்மஸ்தலா கோயில் நிர்வாக அதிகாரி வீரேந்திர ஹெக்டே அரசியல் செல்வாக்கு மிக்கவர். பாஜகவால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர். கோயில் நிர்வாகிக்கும் “அதிகாரமிக்க குடும்பம் கூறியதன் அடிப்படையில் நூற்றுக்கணக்கான உடல்களைப் புதைத்தேன் என்று வாக்குமூலம் அளித்த துப்புரவுப் பணியாளர் கூறியிருக்கிறார்.

மதம், கடவுள், புனிதத்தலம் என்ற போர்வையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக குற்றச் செயல்கள் நடந்துவந்துள்ளன. புனிதத்தலமா? புதைகுழியா? என்று கூறுமளவுக்கு ஏராளமானோர் கொன்று புதைக்கப்பட்டுள்ளனர். பள்ளிச் சிறுமிகள், இளம்பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகி கொல்லப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் அரசியலமைப்புச் சட்டம், அரசு நிர்வாகம், காவல்துறை கைகட்டி வேடிக்கை பார்த்திருக்கின்றது. கடவுள், மதம் என்றால் சட்டத்துக்கு அப்பாற்பட்டது என்ற மத்திய கால மனநிலை நொறுக்கப்பட வேண்டும். இதனை அரசியல் இயக்கங்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

**தொடர்புக்கு: 9500001224**

## சமூகத்தைப் பிளவுபடுத்தும் ஆதிக்கச் சாதி அமைப்புகளைத் தடை செய்!

### இளைஞர் பெருமன்றம் வலியுறுத்தல்

தமிழ்ச்சமூகத்தை பிளவுபடுத்தும் ஆதிக்க சாதி அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் (AIYF) வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக மாநிலச் செயலாளர் க.பாரதி, மாநிலத் தலைவர் இரா.தமிழ்ப்பெருமாள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடிமாவட்டம்ஆறுமுகமங்கலத்தை சேர்ந்த கவின் மென்பொறியாளராக பணியாற்றி வருகிறார். இவரும் நெல்லை மாவட்டத்தை சேர்ந்த இளம் பெண்ணும் காதலித்து வந்துள்ளனர். அந்த இளம்பெண்ணின் பெற்றோர்கள் காவல்துறையில் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் கவின் நெல்லை கே.டி.சி நகர் சித்த மருத்துவமனைக்கு தனது உறவினருடன் வந்துள்ளார். இதனை அறிந்த இளம் பெண்ணின் தம்பி சுர்ஜித் அவரது நண்பருடன் சேர்ந்து கவின்குமாரை ஓட ஓட விரட்டி படுகொலை செய்துள்ளார். இச்சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சுர்ஜித்தின் பெற்றோர்கள் உட்பட மூவரும் சேர்ந்து திட்டமிட்டு இந்த ஆணவப்படுகொலையை செய்திருக்கின்றனர். தமிழ்நாட்டில் சாதிய மனநிலை தொடர்ந்து அதிகரித்து அதனால் தொடர்ஆணவக்கொலைகள் நடைபெற்றுவருவது, அதிர்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டில் கண்ணகி முருகேசன் தொடங்கி, கவின் வரை சாதியை மையப்படுத்தி இச்சமூகம் தருகிற அழுத்தம் காரணமாக அரங்கேறிவரும் படுகொலைகள் ஏராளம். சாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் வந்திருந்தால் இக்கொலைகள் எப்போதோ முடிவுக்கு வந்திருக்கும்.

சாதிப்பெருமை பேசும் அமைப்புகள் சாதிய கட்டமைப்பை தக்கவைக்க தங்கள் சாதியில் உள்ளவர்களுக்கு சாதிவெறியை திட்டமிட்டு உருவாக்குகின்றனர். ஆகவே, சாதி ஆணவப் படுகொலையை தனிச்சட்டம் நிறைவேற்ற வேண்டும். சாதிப்பெருமை பேசும் ஆதிக்க சாதி அமைப்புகளை தடைசெய்யவேண்டும்.

சாதியை ஒழிக்கப் போராடிய பல்வேறு சமூகங்களின் தலைவர்களின் வரலாறுகளைப் பாட நூல்களில் சேர்க்க வேண்டும்.

தூத்துக்குடி கவின் ஆணவக்கொலைக்கு பிண்ணனியாக இருந்த சுர்ஜித் பெற்றோர்கள் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளுக்கான காலி இடங்களை நிரப்பிட வேண்டும்

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வலியுறுத்தல்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளான டி.எம், எம்.சி.எச் படிப்புகளுக்கு, மாணவர் சேர்க்கை ஒன்றிய அரசு நடத்தும், உயர் சிறப்பு மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வு மூலம் நடைபெறுகிறது.

நீட் தேர்வு மதிப்பெண் தரவரிசை அடிப்படையில், முதலில் தமிழ்நாடு அரசு, அரசு மருத்துவர்களுக்கான 50 விழுக்காடு இடங்களுக்கு கவுன் சிலிங் மூலம் மாணவர் சேர்க்கையை நடத்துகிறது. அதன் பிறகு, ஒன்றிய அரசு கவுன்சிலிங் முறையில் மாணவர் சேர்க்கையை நடத்துகிறது. இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் அரசு மருத்துவர்களுக்கான 24 இடங்கள், ஒன்றிய அரசின் இறுதிக் கட்ட மாணவர் சேர்க்கை முடிந்த பிறகும் காலியாக உள்ளன. அவை யாருக்கும் பயனற்று விரயமாகப் போகிறது. அவ்வாறு விரயமாவது சமூகத்திற்கே மிகப் பெரிய இழப்பாகும்.

எனவே, ஒன்றிய அரசு, மீண்டும் கவுன்சிலிங் மூலம் காலியாக உள்ள அந்த இடங்களை நிரப்புவதற்கு, தமிழ்நாடு அரசிற்கு அனுமதி வழங்கிட வேண்டும். இதுகுறித்து தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கு 28.07.2025 அன்று கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும்.

ஆகஸ்ட் 5 ஆம் தேதியை இறுதிக் கட்ட நாளாக நிர்ணயித்து தமிழ்நாடு அரசுக்கு, மாணவர் சேர்க்கையை மீண்டும் நடத்திக் கொள்ள அனுமதியை வழங்கிட வேண்டும். அதன்மூலம், காலியாகப் போகும் அந்த 24 இடங்களிலும், அரசு மருத்துவர்கள் சேருவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

எனவே, ஒன்றிய அரசு, உடனடியாக மீண்டும் கவுன்சிலிங் நடத்தி காலியாக உள்ள இடங்களை நிரப்பிட தமிழ்நாடு அரசிற்கு அனுமதி வழங்கிட வேண்டும் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



மே.து.ரா.

**இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கான வரிகளை 25% என்று அறிவித்திருந்த அமெரிக்கா, தற்போது 50% என உயர்த்தியுள்ளது.**

# இறக்குமதி வரி: அமெரிக்காவை எளிதில் எதிர்கொள்ளலாம்

அமெரிக்காவுக்குப் போட்டியாக, பொருளியல், வணிகம், உற்பத்தி, நுட்ப அறிவு, செல்வாக்கு என அனைத்திலும் போட்டியாக எழுச்சி பெற்றிருக்கும் சீனாவுடன் இணக்கம் காண டிரம்ப் முயற்சிக்கிறார். ஆனால், நட்பு நாடாகக் கருதப்படும் இந்திய நட்பினை முறித்துக்கொள்ளும் செயல்பாடுகளை மேற்கொள்கிறார். இந்தியாவுக்கு எதிராக மட்டுமல்லாது உலக நாடுகள் பலவற்றுக்கும் இறக்குமதி வரி என்ற பெயரில் பல வகையான அழுத்தங்கள் தரப்படுகின்றன.

அடிப்படையாக, ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையே உள்ள வேறுபாடு அமெரிக்காவுக்குப் பெரும் இழப்பினைத் தருகிறது என்ற குற்றச்சாட்டுப் பல ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருகிறது.

2024இல் அமெரிக்காவின் ஏற்றுமதி 3.232 டிரில்லியன் டாலர் என்ற அளவில் இருக்க, இறக்குமதி 4.146 டிரில்லியன் டாலராக இருந்தது. இதனால், அமெரிக்காவின் கடன் 35.294 டிரில்லியன் டாலராக இருந்துள்ளது.

ஏற்றுமதி, இறக்குமதி வேறுபாடுகள் மட்டுமல்லாது, அமெரிக்காவின் செலவுகளும் கடன் அளவைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. 2024இல் அமெரிக்காவின் ஆண்டு வருவாய் 8.720 டிரில்லியன் டாலராக இருக்க, அதன் செலவு 10.945 டிரில்லியன் டாலராக இருந்தது.

அமெரிக்க மக்களின் வாழ்முறை, அரசின் வல்லாண்மை முறை ஆகியன மட்டுமே அமெரிக்காவின் கடனை மிகுவித்து வருகின்றன.

அமெரிக்காவின் இன்றைய சிக்கல்கள் அல்லது தீர்வுகள் என்பன டிரம்ப் நடவடிக்கைகளால் மட்டும் உருவாகி வளர்ந்துவிடவில்லை.

கடந்த 30 ஆண்டுகளாக நிலவி வரும் சிக்கல்களுக்குக் குடியரசுத் தலைவர்களாக இருந்த பலரும் தங்களது வழியில் வல்லாண்மையைச் செலுத்தித் தீர்வு காண முயன்றுள்ளனர். ஈராக், ஆப்கானித்தான் போர்களிலிருந்து, திணிக்கப்பட்ட வணிக உடன்பாடுகள், பொருளியல் தடைகள், தனிமைப்படுத்துதல், நுட்ப பகிர்வுத் தடை, தொழில் வளர்ச்சித் தடை என்பன உள்ளிட்டு வெவ்வேறு வகையான அச்சுறுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

'மீண்டும் சிறப்பான இடத்துக்கு அமெரிக்கா' என்ற முழக்கத்தை முன்னெடுத்த டிரம்ப், தனது முந்தைய ஆட்சிக் காலத்தில் சீனாவையும் ரசியாவையும் முன்னிறுத்தித் தோல்வி கண்டார்.

அதனால்தான் தனது இப்போதைய ஆட்சியில் இறக்குமதி வரி என்ற கருவியினைக் கையில் எடுத்திருக்கிறார்.

பல நாடுகளுக்குமான இறக்குமதி வரியினை மிகுவித்து, அந்த நாடுகளை வழிக்குக் கொண்டுவர முடியுமென்று நம்புகிறார். இதைக் கொண்டு அமெரிக்கப் பொருள்களைப் பிற நாடுகளின் மேல் திணிக்க முயன்று வருகிறார். இதனால், ஏற்றுமதி இறக்குமதி வேறுபாட்டினை நீக்கி வருவாய் பெற முடியும் என்று எதிர்பார்க்கிறார்.

ஆனால், சீனாவும் இந்தியாவும் தனித்துப் பார்க்கப்படுகின்றன என்பதைக் காண முடிகிறது. இத்தகைய முறையற்ற வணிக முறைகளை சீனாவும் இந்தியாவும் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

சீனாவைப்பொருத்தவரைபலதடைகளை அமெரிக்கா எதிர்கொள்ளவேண்டியுள்ளது.




ரசியாவிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளில் சீனா முதலிடத்தைப்பெற்றிருக்கிறது. அமெரிக்காவுக்கு வேண்டிய அரிய மண் வகைத் தனிமங்கள் போன்றவற்றைச் சீனாவிலிருந்து மட்டுமே பெற முடியும் என்ற நிலை உள்ளது. அமெரிக்காவில் உருவாகும் சில வகைச் சிப்பிகளில் 80% சீனாவுக்கு விற்கப்படுகின்றன. சீனா இவற்றை வாங்க மறுத்தால் அமெரிக்க நிறுவனங்கள் பெரும் இழப்பினை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். ஆனால், இந்தச் சிப்பிகளுக்கு மாற்றாகப் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு தன்னிறைவு பெறும் அளவுக்குச் சீனா முன்னேறியுள்ளது.

எடுத்துக்காட்டாக, செயற்கை நுண்ணறிவுக்கான சிப்பிகளை உருவாக்குவதில் தற்போது அமெரிக்கா முன்னிலையில் இருக்கிறது. என்விடியா என்ற பெரும் நிறுவனம் தனது விற்பனைக்குச் சீனாவையே பெரிதும் நம்பியிருந்தது. சீனாவின் வேண்டல்களில் 66% அளவை இந்த நிறுவனம்தான் நிறைவு செய்துவந்தது. குறிப்பாக, செயற்கை நுண்ணறிவுக்கான எச்20 என்ற சிப்பி சீனாவில் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

சீனாவின் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியைத் தடுக்கும் முயற்சியாக இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்த சிப்பியின் ஏற்றுமதியை டிரம்பு தடை செய்தார். ஆனால், இத்தகைய சிப்பிகளைத் தாங்களே உருவாக்கி வந்த குவாயி, காம்ப்ரிகான் போன்ற சீன நிறுவனங்கள் தற்போது உற்பத்தியைப் பெருக்கி, அமெரிக்க இறக்குமதி இல்லாமல் செயல்படும் நிலையினை எட்டிக்கொண்டிருக்கின்றன.

என்விடியா என்ற நிறுவனம் இழப்புகளில் விழுந்தது. பங்கு மதிப்புகள் குறைந்தன. உற்பத்தி செய்த பொருள்கள் முடங்கின. இதனையடுத்து, டிரம்ப் இந்த சிப்பிகளை ஏற்றுமதி செய்வதற்கு ஒப்புதல் தருவதாக உறுதியளித்தார். இருந்தாலும், நாட்டின் காப்பு, கண்காணித்தல் போன்ற அய்யங்களை எழுப்பி, சீனா இறக்குமதிக்கு இன்னும் ஒப்புதல் தரவில்லை. இதற்காகச் சீனாவிடம் அமெரிக்கா மண்டியிட்டுக் கெஞ்சிக்கொண்டிருக்கிறது.

இந்தியாவிலிருந்து பெறும் மருந்துகள், அரிய வகைத் தனிமங்கள், திறன்பேசி போன்ற பொருள்களுக்கு உயர் வரியில் இருந்து அமெரிக்கா விலக்களித்துள்ளது.

இந்தியாவிலிருந்து செல்லும் மருந்துகள் அமெரிக்காவில் வேண்டப்படுகின்றன. அமெரிக்கப் பயன்பாட்டில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் திறன்பேசிகள் பெரும் பங்கு பெற்றுள்ளன. இவை அமெரிக்க நிறுவனங்களால் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுபவை. இதனால், விலக்குத் தருவது தவிர்க்க இயலாததாகிவிட்டது.

ஆடைகள், தோல் பொருள்கள் கடல்சார் பொருள்கள், பட்டை தீட்டப்பட்ட வைரக் கற்கள், நகைகள், சில உணவு வகைகள் ஆகிய இந்திய ஏற்றுமதிப் பொருள்கள் 50% வரிகளை எதிர்நோக்குகின்றன.

இவற்றையெல்லாம் வேறு நாடுகளிலிருந்து பெற முடியும் என்ற எண்ணத்திலேயே இறக்குமதி வரி உயர்த்தப்பட்டிருக்கிறது.

மாறாக, அமெரிக்காவிலிருந்து மரபணு மாற்றப்பட்ட உணவுப் பொருள்கள், பால் பொருள்கள் எண்ணெய், போர் வானூர்திகள், போர்க் கருவிகள் ஆகியவற்றை வாங்குமாறு இந்தியா வற்புறுத்தப்படுகிறது.

ஆனால், வேளாண்மை, பால் உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான மக்கள் நலன் கெடும் என இந்தியா அஞ்சுகிறது.

அமெரிக்க மாடுகளுக்கு விலங்குகளிடமிருந்து பெறப்பட்ட கொழுப்பு உணவாகத் தரப்படுவதால் அவற்றிலிருந்து கறக்கின்ற பால் இந்தியாவில் மறுக்கப்படுகிறது.

இத்தகைய இக்கட்டான நிலைகளில், அமெரிக்காவுடனான உடன்பாடு தள்ளிக்கொண்டே போகிறது. மிரட்டும் வகையில் 50% இறக்குமதி என அறிவித்துப் பணிய வைக்க முற்படுகிறார் டிரம்ப்.

இந்தியாவின் இறக்குமதியில் ரசிய எண்ணெய் 40%க்கு மேல் உள்ளது. இதை நிறுத்தவேண்டும் என்பதோடு நில்லாமல், போர்க் கருவிகளின் இறக்குமதியையும் தடுக்க டிரம்ப் நினைக்கிறார்.

கடந்த 70 ஆண்டுகளாகப் போர் தொடர்பான பெரும்பாலானவற்றை முன்னர் சோவியத் தோன்றியமும் இன்று ரசியாவும் வழங்குகின்றன. எஸ்400 என்ற வான் காப்பு உள்ளிட்ட பலவும் இன்னும் இந்தியாவில் பயன்பாட்டில் உள்ளன. இவற்றுக்கான தேய்மானத் தனிப் பகுதிகள் அவ்வப்போது ரசியாவிலிருந்து வராவிட்டால் இவற்றின் செயல்பாடுகள் நின்றுவிடும்.

இதைத்தான் அமெரிக்கா விரும்புகிறது. பாக்கித்தானைத் தீவிரத்தை ஏற்கும் நாடு என்று கூறிவந்த அமெரிக்கா அதனோடு இயல்பாக உடன்பாடு செய்கிறது. பகைவனை நண்பனாக்கி இந்தியாவைப் பணிய வைக்கலாம் என நினைக்கிறது.

சீனாவுக்கும் ரசியாவுக்கும் எதிராக உருவாக்கப்பட்ட 'குவாட்' என்ற அமெரிக்கா, சப்பான், ஆத்திரேலியா ஆகிய பசிப்பிக் நாடுகளின் கூட்டமைப்பில் இந்தியா அமெரிக்காவின் வற்புறுத்தலால் இணைந்துகொண்டது.

அமெரிக்காவின் திணிப்புக்கு அடி பணிந்து வானூர்திகள், படைக் கருவிகள், எண்ணெய் போன்றவற்றை இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்ட இந்தியா, அண்மைக் காலங்களில் அமெரிக்கச் சார்பு நாடாக மாறிக்கொண்டிருப்பதையும் மறந்துவிடக்கூடாது. காலம்காலமாக நட்பு நாடாக இருக்கும் ஈரானுக்கு எதிராக இசுரேல் சார்புக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. ரசிய உக்ரைன் போர் போன்ற சில விலக்குகள் இருக்கலாம்.

அமெரிக்காவின் வெகு வரி ஏற்றுமதித் தடைகளால் இந்தியப் பொருளிய வளர்ச்சி 0.2% அளவில் மட்டுமே குறையும் என்பது உண்மையானாலும், பல சிறு நிறுவனங்களும் மீன்பிடித் தொழில்களும் நலியும் என்பது உண்மைதான். இவற்றிற்கு மாற்றாக வேற்று நாட்டு அங்காடிகளைத் தேடிப் பிடிக்க முடியும்.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவிலும் அய்ரோப்பாவிலும் பொருளிய முடக்கம் ஏற்பட்டபோது, சீனா தனது உற்பத்தியில் தேக்கம் ஏற்படக்கூடாது என்று 'உள்நாட்டில் பயன்பாடு' என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி கண்டது.

140 கோடி மக்களைக் கொண்ட இந்திய ஒன்றியத்தில் மக்களது வாங்கும் ஆற்றலைச் சிறிது பெருக்கினால்கூட, அமெரிக்கா தடுக்க நினைக்கும் பொருள்களுக்கான அங்காடி தானாக உருவாகிவிடும்.

இந்தியாவில் உற்பத்தி என்பதுடன், 'இந்தியாவின் பயன்பாடு' என்ற இலக்கையும் சேர்த்தால் தீர்வுகள் எளிதில் கிடைக்கும்.

தன்னுரிமை பெற்ற ஒரு நாடு எந்தப் பொருளை எங்கிருந்து வாங்கவேண்டும் என அமெரிக்கா கட்டுப்படுத்துவது இறையாண்மைக்கு விடப்பட்ட சவாலாகும்.

ஆனால், அமெரிக்காவிலிருந்து இந்தியா இறக்குமதி செய்யும் பொருள்களை வேறு பல நாடுகளிலிருந்து நாம் பெற முடியும் என்பதையும் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது.

இப்போது வரை, இந்திய ஒன்றிய அரசு உறுதியாக இருப்பதாகவே தெரிகிறது.

இந்த நிலை நீடிக்கவேண்டும். உறுதியுடன் தடைகளை தாண்ட வேண்டும்.

தொடர்புக்கு : 9444075561

பி.ஜே.பி – ஆர்.எஸ்.எஸ் மதவெறி இராஜ்ஜியம்!
போராடிப் பெற்ற தமிழ்நாட்டு உரிமைகளுக்குப் பூஜ்ஜியம்.
சேலத்தில் செங்கடலென அணி திரள்வோம்!

## நூற்றாண்டு விழாவையொட்டி ‘நியூ ஏஜ்’ இதழுக்கு சந்தா சலுகை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா மற்றும் 26 ஆவது கட்சி பேராயத்தை முன்னிட்டு, ‘நியூ ஏஜ்’ ஆங்கில இதழுக்கு மூன்றாண்டு சந்தா செலுத்துபவர்களுக்கு சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஆண்டு சந்தா ரூபாய் 350 ஆகும். மூன்றாண்டு சந்தா ரூ1050.

ஆனால், 2025 செப்டம்பர் 30 தேதிக்குள் மூன்று ஆண்டு சந்தா செலுத்துபவர்களுக்கு ரூபாய் 150 சலுகை தந்து, ரூ.900 என ‘நியூ ஏஜ்’ அறிவித்துள்ளது. தோழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

## குப்பை மற்றும் இறைச்சிக் கழிவுகளை அகற்ற வலியுறுத்தல்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகர நிர்வாகக் குழு கூட்டம் பி.கே. எஸ்.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சி.பக்கிரிச்சாமி கலந்து கொண்டு வழி காட்டினார். நகரச் செயலாளர் எம்.எம்.சுதாகர் மாவட்டக் குழு முடிவுகளை எடுத்துரைத்தார். கூட்டத்தில் பட்டுக்கோட்டை நகரக் கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற முறைகேட்டினால் பாதிக்கப்பட்ட பயனாளிகள் ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்துவது, குப்பை மற்றும் இறைச்சிக் கழிவுகளை உடனடியாக அகற்ற வேண்டும் எனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. முடிவில் நகரத் துணைச் செயலாளர் முத்து இளையராஜா நன்றி கூறினார்.

## நெல்லையில் இடதுசாரிகள் கண்டன ஆர்ப்பாட்டம்




ஆணவப் படுகொலையைக் கண்டித்து இடதுசாரிக் கட்சிகளின் சார்பில், திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையம் முன்பு, சிபிஐ எம்எல் மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தமிழகத்தில் ஜாதி ஆவணக் கொலைகளுக்கு எதிராகச் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. இதில் சிபிஎம் கே.ஜி.பாஸ்கர் ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஏ.சேதுராமலிங்கம், எம்.எஸ்.மணியன் கண்டன உரை நிகழ்த்தினார். சிபிஎம் மாவட்டச் செயலாளர் ஸ்ரீராம் நிறைவு உரையாற்றினார். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் களக்காடு ஒன்றியச் செயலாளர் எம்.லெனின் முருகானந்தம், ராதாபுரம் தாலுகா செயலாளர் என்.கலைமுருகன், நெல்லை மண்டலச் செயலாளர் ஏ.வெடிகண்ட பெருமாள், பாளை ஒன்றியச் செயலாளர் வி.பரமசிவன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் கே.முத்துகிருஷ்ணன், பி.கிருஷ்ணன், எஸ்.ஏ.பி.பாலன், பி.சுரேஷ் மாவட்ட அலுவலகச் செயலாளர் ஏ.முத்துகிருஷ்ணன் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

## சிபிஐ மாமன்ற உறுப்பினர் எதிர்ப்பால் இணைப்புக் கட்டண உயர்வு ரத்து



திருச்சி மாநகராட்சி மன்றக் கூட்டத்தில், மாநகரில் குடிநீர், பாதாளச் சாக்கடை இணைப்புகளுக்கு, சதுர அடிக் கணக்கில் கட்டண உயர்வுக்கான தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். இந்தத் தீர்மானத்தை ஒத்திவைக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ்குமார் எதிர்ப்புத் தெரிவித்தார். பின்னர் பேசிய திருச்சி மேயர் மு.அன்பழகன், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்புகளுக்கான கட்டண உயர்வு செயல்பாட்டுக்கு வராது, நிறுத்தி வைக்கப்படுகிறது என அறிவித்துள்ளார்.

## ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்திற்கு சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வரவேற்பு

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் என்ற முழு உடல் நலப் பரிசோதனை மருத்துவ முகாம்கள் வரவேற்பிற்குரியது. இத்திட்டம் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். பல்வேறு நோய்களைத் தடுக்க உதவும். புற்றுநோய், சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் போன்ற பல நோய்களை, உடல்நலப் பிரச்சினைகளைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சைகளைப் பெற உதவும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த, அதிகமான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் தேவை. ஏற்கெனவே அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மருத்துவப் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளது. இந்தத் திட்டம் அரசு மருத்துவமனைகளின் இயல்பான செயல்பாட்டை எவ்வகையிலும் பாதித்துவிடக் கூடாது. பல புதிய மருத்துவத்துறை சார்ந்த திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த, கூடுதலாக மருத்துவப் பணியாளர்களை அரசு நியமிக்க வேண்டும்.

இந்தத் திட்டத்திற்கு, தேவைப்பட்டால் விருப்பமுள்ள உள்ளூர் தனியார் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இத்திட்டம் அனைத்து மக்களையும் சென்றடைய உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்திட வேண்டும் என்று சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

## ஜிஎஸ்டி வரியை முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தல்




ஏஐடியூசி தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனத்தின் மாநிலக் குழு கூட்டம், விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் 31.07.2025 அன்று, சம்மேளன மாநிலத் தலைவர் மணி மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் என்.கே.ராஜன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார்.

ஏஐடியுசி மாநிலப் பொதுச்செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தி.ராமசாமி எக்ஸ் எம்.பி வாழ்த்திப் பேசினார். கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் லிங்கம் எக்ஸ் எம்.எல்.ஏ விருதுநகர் மாவட்டச் செயலாளர் செந்தில்குமார், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் முத்துமாரி, அமைப்புச் செயலாளர் ரவி, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் பொன்னுப்பாண்டியன், கட்டிடத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் நடராஜன், ராஜபாளையம் நகரச் செயலாளர் விஜயன், ராஜபாளையம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன் உள்ளிட்ட மாநிலக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதிக்கும் ஜிஎஸ்டி வரியை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியான அனைத்து ஜவுளி ரகங்களை கோ ஆப் டெக்ஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து, அதற்கான தொகையை உடனடியாக வழங்க வேண்டும். பருத்தி நூல், பட்டு நூல்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தி, நெசவாளர்களுக்கு மானிய விலையில் கச்சா பொருள்கள் வழங்க வேண்டும். 58 வயதான அனைத்துக் கைத்தறி நெசவுத்தொழிலாளர்களுக்கும் மாதம் ரூபாய் 6000 ஓய்வூதியம் வழங்க வேண்டும். கைத்தறி தொழிலாளர் நல வாரிய உதவித்தொகையை உயர்த்தி வழங்கிட வேண்டும். கைத்தறிகளுக்கு ஒதுக்கீடு செய்த 11 ரக ஒதுக்கீட்டை அமல்படுத்திட வேண்டும். ரிபேட் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத் தேர்தலை உடனடியாக நடத்திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கோவில்பட்டி, உளுந்தூர்பேட்டையில்

## நூறு நாள் வேலை கேட்டு ஆர்ப்பாட்டம்




**கோவில்பட்டி:** கோவில்பட்டி அருகே ஊத்துப்பட்டி கிராம மக்களுக்கு, 100 நாள் திட்டத்தில் வேலை வழங்க வலியுறுத்தியும், வனத்துறை அலுவலத்தில் சுழற்சி முறையில் வேலை வழங்க வலியுறுத்தியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, கட்சியின் ஊத்துப்பட்டி கிளைச் செயலாளர் சுரேஷ்குமார் தலைமை வகித்தார். தாலுகா செயலாளர் பாபு, நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம், துணைச் செயலாளர்கள் விஜயலட்சுமி, அலாவுதீன், நகரக்குழு செல்லையா, பொருளாளர் சீனிவாசன் மற்றும் ஊத்துப்பட்டி கிராம மக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலமுருகனிடம் கோரிக்கை மனுவை வழங்கினர்.

**உளுந்தூர்பேட்டை:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஒன்றியம் ஈஸ்வர கண்ட நல்லூர் ஊராட்சி பெரியப்பட்டு கிராமத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின்படி 7 மாதங்களாக நூறுநாள் வேலை வழங்கவில்லை. இதைக் கண்டித்து, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன் தலைமையில், திருநாவலூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். உரிய அலுவலர் கோரிக்கை குறித்துப் பேச முன்வராததால், உள்ளிருப்புப் போராட்டம் செய்யப்பட்டது. காவல்துறை ஆய்வாளர் உரிய அலுவலர்கள் வந்து பேசி, உடனே வேலை உத்தரவு 100 பேருக்கு வழங்கப்பட்டது.

இதில் வட்ட நிர்வாகிகள் ஜெயராமன், பாபு, ஜானகிராமன், ஆனந்தன், அங்கம்மாள், லலிதா, விமலா, சித்ரா பெரிய நாயகம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூர் ஒன்றிய கட்சியின் புதிய அலுவலகத் திறப்பு விழா



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், அலங்காநல்லூர் ஒன்றிய புதிய கட்சி அலுவலகத்தை, மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ், மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல் ஆகியோர் திறந்து வைத்தனர். அலங்காநல்லூர் ஒன்றியச் செயலாளர் குமரேசன் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர் அலெக்ஸ் கலந்து கொண்டனர்.

# ஆணவப் படுகொலையைத் தடுக்க சிறப்புச் சட்டம் இயற்றிட வேண்டும்

## ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் கண்டன ஆர்ப்பாட்டம்




தமிழகத்தில் தொடர்ந்து சாதி ஆணவப் படுகொலைகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலத்தைச் சேர்ந்த பொறியாளர் கவின்குமார் படுகொலை செய்யப்பட்டார். எனவே, சாதி ஆணவப் படுகொலையைத் தடுக்க சிறப்புச் சட்டம் இயற்றிட வலியுறுத்தி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**கோவை:** கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட தலைவர் பி.முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டச் செயலாளர் ஏ.அஸ்ரப்அலி, வி.எஸ்.சுந்தரம், என்.செல்வராஜ், வழக்கறிஞர் தீபிகா, வழக்கறிஞர் பி.குணசேகரன், இஸ்கப் மாவட்டச் செயலாளர் எம்.வி.ராஜன், கலை இலக்கியப் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் ப.பா. ரமணி, மாதர் சம்மேளனம் ஜே.கலா, சாரதா மணிக்குமார், மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் மா.வெங்கடேசன் தலைமையில், அனைத்துக் கட்சிகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம், திருநாவலூர் கூட்டுச் சாலையில் நடைபெற்றது. மனிதநேய மக்கள் கட்சி ஒன்றியத் தலைவர் ஆஷாத், விசிக ஒன்றியச் செயலாளர் இளங்கோவன், வெற்றி முரசு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சாமிதுரை, தஒவாஇ மாவட்டக் குழு வி.ஜானகிராமன் ஆகியோர் முன்னிலையில் விசிக கிழக்கு மாவட்டச் செயலாளர் அறிவுக்கரசு, தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டச் செயலாளர் மோகன், மக்கள் அதிகாரம் விநாயகம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க வட்ட தலைவர் கே.ஆறுமுகம், செயலாளர் பாபு, பொருளாளர் செந்தில், துணைத் தலைவர் ஆனந்தன், ஏ.மாரியப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

**தேனி:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மற்றும் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் இணைந்து, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு, ஏஐஓய்எப் மாவட்டச் செயலாளர் எம்.வி.கே.மணிகண்டன், டிஒபிஎம் மாவட்டச் செயலாளர் சி.பிரவேந்திரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.பி.ராஜ்குமார், எஸ்.திருமலைக் கொழுந்து, பா.பிச்சைமணி, ஏ.அரசகுமரன், ஏஐஓய்எப் மாவட்ட தலைவர் எம்.விக்னேஷ்வரன், டிஒபிஎம் மாவட்ட தலைவர் பி.ஞானவேல், ஏஐஓய்எப் மாவட்டப் பொருளாளர், ஜனசக்தி பிரபாகரன், மாநிலக் குழு உறுப்பினர் ஏ.கௌரி, மாவட்ட துணைச் செயலாளர் வே.ஜெய்ஹிந்த், மாவட்ட துணைத் தலைவர் எஸ்.வேல்முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.
















**சின்னமனூர்:** ஆணவக் கொலையைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றிட வலியுறுத்தியும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தேனி மாவட்டம், சின்னமனூர் ஒன்றியக் குழு சார்பில் மாவட்ட தலைவர் ம.விக்னேஸ்வரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் ஒன்றியச் செயலாளர் வே.ஜெய்ஹிந்த் கண்டன உரையாற்றினார். ஏஐஓய்எப் மாவட்டக் குழு உறுப்பினர் பி.பிரேம்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் செ.கார்த்திக்ராஜா மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பெ.வசந்தகுமார், செ.இருதயராஜ், நா.அருண், ந.பவுன்ராஜா உள்ளிட்ட தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

**வடசென்னை:** வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரி முன்பாக, மாவட்டச் செயலாளர் ஜி.சுப்பிரமணி, பெரம்பூர் தொகுதி செயலாளர் மு.தளபதி, மாவட்டப் பொருளாளர் சு.பாஸ்கர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் லி.உதயகுமார் ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். மாநிலச் செயலாளர் எஸ்.கே.சிவா முடித்து வைத்துப் பேசினார்.

இதில் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் ஆ.சுப்பிரமணி, மாநிலப் பொருளாளர் இரா.மோ.சந்தோஷ் குமார், தலைமைக் குழு உறுப்பினர் டி.செண்பகம் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார். ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் அருள், எம்.சி.தில்குமார், பார்த்திபன், கா.ராஜாராம், சி.முனுசாமி, வேதாசலம், மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தென் சென்னை:** சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகில் மாவட்டச் செயலாளர் சௌமியா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் எஸ்.கே.சிவா கண்டன உரை நிகழ்த்தினார். மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மணிகண்டன், கண்ணியப்பன், அசோகன் உட்பட கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி முன்பு மாவட்டச் செயலாளர் ஜெகதீஸ்வரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்டச் செயலாளர் சீனிவாசன், நிர்வாகக் குழு உறுப்பினர் இடும்பையன், விவசாயச் சங்க மாவட்டச் செயலாளர் சிவராமன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் ராஜ் மோகன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

**கரூர்:** கரூர் தலைமைத் தபால் அலுவலகம் முன்பாக, மாவட்டச் செயலாளர் பி.பாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் அசரப் அலி கண்டன உரை நிகழ்த்தினார். மாநிலக் குழு உறுப்பினர் ஆர்.தங்கவேல் துவக்கி வைத்துப் பேசினார். முன்னாள் மாவட்டச் செயலாளர் ரத்தினம், மாவட்டக் குழு உறுப்பினர் மோகன் குமார், நகரச் செயலாளார் கார்த்திகேயன், விதொச ஆண்டியப்பன் உட்பட கட்சியின் முன்னணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் தபால் நிலையம் அருகில் மாவட்ட தலைவர் அழகு திருநாவுக்கரசு, மாவட்டச் செயலாளர் இள.குமணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. சி.பக்கிரிசாமி, வி.குணசேகரன், என்.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கட்சியின் மாவட்டச் செயலாளர் கோ.சக்திவேல் துவக்க உரை ஆற்றினார்.

அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியச் செயலாளர் த.லெனின் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து உரையாற்றினார். வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் வி.கல்யாணசுந்தரம், மாவட்டத் துணைச் செயலாளர் ராமச்சந்திரன், இளைஞர் பெருமன்றத்தின் மாநிலப் பொருளாளர் காரல் மார்க்ஸ், மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் ம.விஜயலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கடலூர்:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் கடலூரில் கண்டன ஆர்ப்பாட்டம்ச் நடைபெற்றது.

**கார்ப்பரேட்டுகளுக்கு கடன் தள்ளுபடி!**
**உழைக்கும் மக்களுக்கோ ஜிஎஸ்டி இடி!**
**அநீதியைத் தட்டிக்கேட்க அணிதிரள்வோம் சேலத்தில்!**

# மாலேகான் குற்றவாளிகள் விடுதலையாகும் மர்மம்



ந.சேகரன்

**17 ஆண்டுகளுக்கு முன் ரம்ஜான் மாதம். 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 தேதி மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம் மாலேகான் நகரில் அமைந்துள்ள அந்தப் பெரிய மசூதி காலை 9.35 மணி. மக்கள் நடமாடிக்கொண்டிருக்கும் பகுதி திடீரென மசூதி அருகே மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்ட சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறுகிறது.**



அந்த இடத்திலே 6 பேர் பலியாகினர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைகின்றனர்.

இந்த வெடிகுண்டு காரணமான குற்றவாளிகள் 7 பேர் கைது செய்யப்படுகின்றனர். சிறப்பு நீதிமன்றம் மூலம் 17 ஆண்டுக் காலம் விசாரணை நடைபெறுகிறது. கடந்த ஜீலை 31 அன்று வந்த இறுதித் தீர்ப்பின்படி, வெடிகுண்டு குற்றவாளிகள் 7 பேர்களும் எந்தத் தண்டனையுமின்றி விடுதலையாகின்றனர். இன்றைய நாளில் அந்தக் குற்றவாளிகள் சுதந்திரமாக வலம் வருகின்றனர்.

குற்றவாளிகள் எப்படி யாரால் தப்பித்துள்ளனர்? இவர்கள் தண்டனை ஏதுமின்றி விடுதலையாக திரைமறைவில் நடைபெற்ற கபடசூழ்ச்சிகள் என்ன? வெளிச்சத்திற்கு வரும் உண்மைகளைப் பார்ப்போம்.

## யாரந்தக் கொலைக்குற்றவாளிகள்?

வெடிகுண்டு கொலையாளிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு மகாராஷ்டிரா காவல்துறையிடமிருந்து, 2008 அக்டோபர் 21ஆம் தேதி முதல் மகாராஷ்டிரா தீவிரவாதத் தடுப்பு போலீசார் (ஏடிஎஸ்) வசம் ஒப்படைக்கப்படுகின்றது. பொறுப்பேற்ற ஏடிஎஸ் விரைவாகச் செயல்பட்டு, வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் உரிமையாளர் (சனாதனப் பிரச்சாரம் செய்யும் பெண் துறவி எனத் தன்னை அழைத்துக்கொள்ளும்) பிரக்யா சிங் தாக்குர் என்பவருக்குச் சொந்தமானது எனத் தெரிந்ததும் 2008 அக்டோபர் 23 ஆம் தேதி (அதாவது வெடிகுண்டு சம்பவம் நடந்து 1 மாதத்திற்குள்) கைது செய்யப்படுகிறார். தொடர் விசாரணையின் விளைவாக மற்ற 6 கொலைக்குற்றவாளிகள் 2008 நவம்பர் மாதத்தில் கைது செய்யப்படுகின்றனர். அவர்களில் முக்கியமானவர் இராணுவத்தில் உளவுப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த லெப்டினென்ட் கர்னல் பிரசாத் புரோகித் மற்றும் முன்னாள் ராணுவ அதிகாரி ரமேஷ் உபாத்யாய், ராணுவ உளவுப்பிரிவு அதிகாரி சுதாகர் சதுர்வேதி, அபினவ் பாரத் என்ற அமைப்பின் நிர்வாகிகள் அஜய் ரஹிர்கர், சுதாகர் சதுர்வேதி, சமீர் குல்கர்னி ஆகியோர் கைதுசெய்யப்படுகின்றனர். புரோகித்தான் காஷ்மீரிலிருந்து ஆர்டிஎக்ஸ் என்ற வெடிகுண்டை வரவழைத்தவர் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

2008 நவம்பர் 20 தினத்தன்று, கடும் நடவடிக்கை, தண்டணை வழி வகைசெய்யும் சிறப்பு மகாராஷ்டிரா குற்ற தடுப்புச்சட்டத்தின் கீழ் இந்தக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திறன்படச் செயல்பட்டு மேற்கண்ட கொலையாளிகளைக் கைது செய்யக் காரணமாக இருந்த மகாராஷ்டிரா தீவிரவாதத் தடுப்புக் காவல் தலைமை அதிகாரி ஹேமந்த் கர்கரே, நவம்பர் 26 அன்று மும்பை பயங்கரவாதத் தாக்குதலின் போது மர்மமான முறையில் கொல்லப்படுகிறார். மாலேகான் வெடிகுண்டு சம்பவத்தில் இந்து தீவிரவாத அமைப்பான அபினவ் பாரத் சம்பந்தப்பட்டுள்ளது என முதன்முதலில் கண்டுபிடித்தவர் என்ற காரணத்தினால், ஹேமந்த் கர்கரேயை ''தேசத் துரோகி'' என பாஜக அவரை வசை பாடியது இந்து தீவிரவாதி கும்பலால் ஹேமந்த் கார்கரே கொலை செய்யப்பட்டார் என்ற குற்றச்சாட்டு வலுவாக இருந்து வருகிறது.

மாலேகான் வெடிகுண்டு சம்பவத்திற்குக் காரணமானவர்கள் ஏற்கெனவே கைதுசெய்யப்பட்ட 7 பேர்கள் உள்பட மொத்தம் 11 பேர்கள் குற்றவாளிகள் என ஏடிஎஸ் குற்றப் பதிவு தாக்கல் செய்தது.

இந்த வழக்கு பின்னர் அதாவது 2011 ஏப்ரல் 1ஆம் தேதியன்று தேசியப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்படுகிறது. அப்போது ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்தது காங். தலைமையிலான யுபிஏ கூட்டணி அரசு.

இதன்பின்னர் கைது ஆகாமல் தலைமறைவாக இருந்த மற்ற இரு கொலைக்குற்றவாளிகள் லோகெஷ் சார்மா மற்றும் தன்சிங் ஆகியோர் 2012இல் கைது செய்யப்படுகின்றனர்.

2014 இல் ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் நிகழ்கிறது.அதாவது மோடி பிரதமாகப் பதவி ஏற்கிறார்.

இதற்குப் பின்தான் சில முக்கிய அதிர்ச்சிகரமான சம்பவங்கள் தீர்ப்புகள் நடந்தேறுகினறன.

தண்டனை ஏதுமின்றி வெடிகுண்டு குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவதற்கு அடித்தளமிட்டன இந்த அதிர்ச்சிகரமான சம்பவங்கள். அவற்றை வரிசையாகப் பார்ப்போம். 11 குற்றவாளிகள் என்பதை 7 என்பதாக என்ஐஏ குறைக்கிறது.

**முதலாவதாக,** குற்றவாளிகள் சார்பில் தங்களை மகாராஷ்டிரா குற்ற தடுப்புச் சிறப்புச் சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கின்றனர். கொலைக்குற்றவாளிகளுக்குச் சாதகமான தீர்ப்பு உச்சநீதிமன்றம் 2015இல் வழங்குகிறது. அதாவது மகாராஷ்டிரா சிறப்புச் சட்டத்திலிருந்து குற்றவாளிகளுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.

**இரண்டாவதாக,** இந்த தேசியப்புலனாய்வுப் பிரிவின் அரசுத் தரப்பு சிறப்பு அதிகாரியாக நேர்மையாகச் செயல்பட்ட ரோகினி சாலியன் என்பவர் பகிரங்கமாக ஒரு குற்றச்சாட்டு வைக்கிறார். அதாவது வெடிகுண்டு கொலைக் குற்றவாளிகளுக்குச் சாதகமான முறையில் செயல்படுமாறு தனக்கு மேலிடத்திலிருந்து நிர்ப்பந்தம் வருகிறது என்றும் என்னை இந்தப் பணியிலிருந்து விடுவித்து மேலிடத்தின் சொல்லுக்கேற்ப அடிபணியும் ஒருவரை அவ்விடத்தில் நியமிக்கலாம் எனப் பகிரங்கமாகச் சொல்கிறார். அவர் சொல்லியவாறு திறன்பட நேர்மையாகச் செயல்பட்ட ரோகினி சாலியன் 2015 ஜூன் மாதம், பணியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

**மூன்றாவதாக,** 2016 இல் ஏற்கெனவே கொலைக்குற்றவாளிகளுக்கு எதிராக ஏடிஎஸ் விசாரணயில் வாக்குமூலம் அளித்தவர்களிடமிருந்து மீண்டும் புதியதாக திருத்திய வாக்குமூலம் வாங்கும் வேலையில் ஈடுபடுகிறது தேசியப் புலனாய்வு அமைப்பு. ஏன் புதியதாக அதுவும் திருத்திய வகையில் வாங்க வேண்டும் என்பதில் சூட்சுமம் அடங்கியுள்ளதை அறிய முடிகிறது.

இதன்விளைவாகச் சிறப்புநீதிமன்றத்தில் முன்னர் தாக்கல் செய்த குற்றச்சாட்டு பதிவு, சாட்சியங்களின் வாக்குமூலங்கள் எல்லாம் மாற்றி அமைக்கப்பட்டு 2016 மே வாக்கில் தேசியப் புலனாய்வு அமைப்பு சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறது.

அதுமட்டுமல்ல கொலைக் குற்றவாளிகளுக்கு உடந்தை எனக் கைது செய்யப்பட்ட ராகேஷ் தவடே மற்றும் ஜெகதீஷ் மாத்ரெ ஆகியோரின் மீது குற்றம் ஏதுமில்லை எனக் கூறி கொலைக்குற்றத்திலிருந்து விடுவிக்கிறது தேசியப் புலனாய்வு. அது மட்டுமல்ல 2016 இல் முதல் குற்றவாளி பிரயாக் தாக்கூர் தவறேதும் இழைக்கவில்லை என வக்காலத்து வாங்குகிறது தேசியப் புலனாய்வு. இதன் பின்னணியில் யார் இருந்திருக்கக் கூடும் என்பது வெள்ளிடை மலை.

**நான்காவது நிகழ்வு,** கிளைமேக்ஸ் காட்சி போல், இதுவரை ஜாமீன் மறுக்கப்பட்டுவந்த கொலைக் குற்றவாளி நம்பர் 1 பிரயாக் சிங் தாக்கூர் 2017 ஏப்ரல் 15 அதாவது ஏறத்தாழ 9 ஆண்டுகள் ஜாமீன் வழங்கப்பட்டு அவர் வெளிவந்து விடுகிறார். இவருக்கு 2019 24 வரை பாஜக எம்.பி ஆக வேறு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

முதல் குற்றவாளி ஜாமீனில் வந்ததைத் தொடர்ந்து, 2017 ஆகஸ்டு அக்டோபர் மாத காலத்திற்குள் இதரக் கொலைக் குற்றவாளிகள் ஜாமீன் பெற்று வெளி வந்து விடுகின்றனர்.

**ஐந்தாவது நிகழ்வுதான்** வழக்கின் போக்கையே திசை திருப்பிவிடுகிறது. ஆம், ஆரம்பத்தில் விசாரணை பொறுப்பை மேற்கொண்ட மகாராஷ்டிரா தீவிரவாத தடுப்பு போலீசார் பெற்ற வாக்குமூலங்களைக் கிடப்பில் போடப்பட்டு மீண்டும் புதியதாகச் தேசியப் புலனாய்வு திருத்தப்பட்ட வாக்குமூலங்கள் பெறுகின்றன. இந்த வாக்குமூலங்களில் பலர் பிறழ்வாக்குமூலம் அளிக்கின்றன. 323 வாக்குமூலங்களில் 37 சாட்சியங்கள் முன் கொடுத்ததற்கு முரண்பட்டுக் கொலையாளிகளுக்குச் சாதகமான வகையில் வாக்குமூலங்கள் தற்போது பெறப்பட்டன. இதன் பின்னணியில் யார் இருந்திருக்க முடியும் என்பதை எளிதாகவே ஊகிக்க முடியும்.

**6வது நிகழ்வாக,** குற்றவாளிக்கு எதிராக தகுந்த ஆதாரத்துடன் சாட்சியமளித்த 13 சாட்சிய வாக்குமூலங்கள் 2016 இல் காணாமல் போய்விடுகிறதாம். திருடுபோனதாக தேசியப் புலனாய்வு அமைப்புநீதிமன்றத்தில் கூறுகிறது. இதையும் நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது. தீர்ப்பு கூறப்படும் நாள்வரைக்கும் காணாமல் போன அந்த 13 வாக்குமூலங்கள் கிடைக்காமலே போய்விடுகிறதாம். விளைவு குற்றவாளிகள் மேல் வலுவான சந்தேகம் இருந்த போதும், போதிய வலுவான ஆதாரங்கள் சாட்சியங்கள் இல்லை எனச் சொல்லி வெடிகுண்டு கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்கிறது சிறப்பு நீதிமன்றம்.

ஆக 17 ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கு முடிவில் நீதி மறுக்கப்பட்டுள்ளது. வெடிகுண்டு வெடிப்பால் 6 பேர் உயிரிழந்துள்ளனர் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டித்து உரிய நீதி வழங்கப்படவில்லை எனில் புலனாய்வு மற்றும் விசாரணை அமைப்புகள் நீதிமன்றங்கள் எதற்காக? நடந்தேறி உள்ள இந்த உயிரிழப்புக்களுக்கு யார் பொறுப்பு ஏற்பது?

எனவே இந்தத் தீர்ப்பு வழமையான முறையான விசாரணையால் வந்தல்ல. மாறாக திட்டமிட்ட முறையில் குற்றவாளிகளைக் காப்பாற்ற மேலிட முயற்சிகள் திரைமறைவில் நடந்துள்ளன என்பது தெளிவாகிறது.

குஜராத் கலவரத்தில் கூட்டுப் பாலியல் வன்முறைக்கு ஆளான பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகள் விடுதலையானது என்பதும் ஒன்றிய அரசில் பாஜக ஆட்சி செலுத்தும் வரை இந்தக் கொடுமைகள் நடந்தேறிக் கொண்டுதான் இருக்கும். மக்கள் எழுச்சி கொண்டு எதிர்க்காத வரை..

தொடர்புக்கு: 9443120051

## தீர்ப்பு குறித்து...

**ரோகினி சாலியன்:** இவர்தான் மாலேகான் வெடிகுண்டு வழக்கில், 2015 வரை சிறப்பு அரசு தரப்பு வழக்கறிஞராகப் பணியாற்றியவர். வலுவான ஆதாரங்களைத் திரட்டி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தவர். இந்தத் தீர்ப்பு குறித்து ரோகினி சாலியன் சொல்கிறார்" தீர்ப்பு இவ்வாறாகத்தான் வெளிவரும் என எதிர்பார்த்திருந்தேன். காரணம். உண்மைகளை மறைப்பதில்தான் பலர் முனைப்பாக இருந்தனர். இறுதியாக 2017 ல் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றவழக்கு பதிவாகும் போது நான் கொடுத்திருந்த ஆதாரங்கள் சாட்சியங்கள் அங்கே தாக்கல் செய்யப்படவில்லை. அவை மறைக்கப்பட்டன. ஏன் அழிக்கப்பட்டன என்று கூடச் சொல்லலாம். அதுமட்டுமல்ல முற்றிலும் நேர்மாறான சாட்சியங்களை நீதிமன்றத்தில் வைத்தனர்.

2015க்கு முன் நான் நேர்மையாகக் கடுமையாக உழைத்துக் குற்றவாளிகளுக்கு எதிரான வலுவான ஆதாரங்களைத் திரட்டினேன். ஒரு கட்டத்தில் எனது பணியில் வேகமாகச் செல்லக்கூடாது குற்றவாளிகளுக்கு அனுசரணையான முறையில் மென்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டுமென மேலிடத்திலிருந்து எனக்கு நிர்பந்தம் வந்தது. பின்னர் பணியிலிருந்து என்னை விடுவித்துவிட்டனர்.

மிகக் கடுமையாக உழைத்து உண்மைகளை வெளிக் கொண்டு வந்தோம். ஆனால், அவை உலகிற்குத் தெரியாமல் மறைக்கப்படுமேயானால் நீதி எப்படி வெளிவரும். மிகச் சிக்கலான இத்தகு வழக்குகளில் எங்களது நேர்மையான உழைப்பும் ஆதாரங்களும் வீணடிக்கப்படுகின்றன. எனவே குற்றவாளிகள் விடுதலை ஆகும் இந்தத் தீர்ப்பை நான் எதிர்பார்த்திருந்ததால் ஏமாற்றமடையவில்லை. இதற்கெல்லாம் காரணம் நம்மை ஆள்பவர்கள். அவர்களைத் தேர்வு செய்த மக்கள்தான்"

**பி.ஜி.கோல்ஸே படேல்:** இவர் பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியாய் இருந்தவர். இவர் சொல்கிறார்.." போதுமான சாட்சியங்கள் அரசுத் தரப்பில் கொடுக்கப்பட்டும் குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள் என்றால் அங்கே நீதி செத்துவிட்டது என்றுதான் நான் சொல்வேன்."

**எஸ்.எம்.முரெஷிப்:** இவர் மகாராஷ்டிரா மாநிலக் காவல் துறை ஐ.ஜி.ஆகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் சொல்வது.." தற்போதைய ஆட்சியில் என்னென்ன நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நாமறிவோம். எனவே இந்தத் தீர்ப்பு குறித்து நான் அதிர்ச்சியடையவில்லை. குற்றவாளிகள் தவறாமல் தண்டிக்கப்பட வேண்டிய தெளிவான வழக்கு இது." ஆனால் குற்றவாளிகள்தான் தப்பிவிடப்பட்டுள்ளார்களே!

# வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும்

## தருமபுரி மாவட்ட மாநாடு வலியுறுத்தல்







இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட, 25வது மாவட்ட மாநாடு கே.மணி, பா.முருகன், எஸ்.கமலாமூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன் வரவேற்றார். மாநிலக் குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் கட்சிக் கொடியை ஏற்றி உரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் எம்.மாதேஸ்வரன் அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் வேலை அறிக்கை சமர்பித்துப் பேசினார். மாநிலக் கட்டுபாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.இரவி ஆகியோர் அரசியல் விளக்க உரையாற்றினர். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நிறைவுரை ஆற்றினார். மாவட்டப் பொருளாளர் சி.மாதையன் நன்றி கூறினார். மாவட்டச் செயலாளராக எஸ்.கலைச்செல்வம் மற்றும் 65 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது.

பொம்மிடி கோம்பேரி இணைப்புச் சாலைத் திட்டத்தை முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். ஒகேனக்கல் உபரிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். ஏரி, குளங்களைத் தூர்வார வேண்டும். சிப்காட் தொழில்பேட்டையைத் தொடங்கி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். சிறு, குறு தொழில்கள் தொடங்க வங்கிகள் காலதாமதமின்றிக் கடன் வழங்க வேண்டும். விடுபட்டுள்ள அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை வழங்க வேண்டும். கல்விக் கடனை ரத்து செய்ய வேண்டும். வேளாண்மைக்கல்லூரி அமைக்கவேண்டும். அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை அமைக்க வேண்டும என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் மற்றும் 65 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது.

# காஞ்சிபுரத்தில் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும்

## காஞ்சிபுரம் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்






இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்ட 25வது மாநாட்டில், மூத்த தோழர் கே.ராஜகோபால் கொடியேற்றினார். பின்னர் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தலைமைக் குழுவாக எஸ்.ராமச்சந்திரன், ஏ.மூர்த்தி, டி.சுந்தரமூர்த்தி ஆகியோர் செயல்பட்டனர். இரங்கல் தீர்மானத்தை பி.வி.சீனிவாசன் வாசித்தார். ஜெ.கமலநாதன் வரவேற்புரை ஆற்றினார். சிபிஐ மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

15 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டச் செயலாளராக பி.வி.சீனிவாசன், துணைச் செயலாளர்களாக பி.கார்த்திக், எல்.தங்கராஜ். பொருளாளராக ஜெ.கமலநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள். தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி நிறைவுரையாற்றினார்.

காஞ்சிபுரத்தில் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும். பாலாற்றில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் புகழ்பெற்ற காஞ்சிபுரம் பட்டு நெசவுத் தொழிலுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே பட்டுச் சேலை விற்பனைக்கு ஜிஎஸ்டி வரியை நீக்க வேண்டும். கோரா சரிகைச் சாயப் பொருள் உள்ளிட்ட பொருள்களுக்கும் ஜிஎஸ்டியை நீக்க வேண்டும். விசைத்தறியில் பட்டு நெசவு நடத்தப்படுவதை சட்டப்படி தடுக்க வேண்டும். பட்டு நூல் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தில் முறைகேடுகளைத் தடுக்க தமிழக அரசு கைத்தறித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# திருச்சியில் மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முற்றுகை

திருச்சி மாநகரில் கட்டப்பட்டு வரும் ஜங்ஷன், மேரீஸ் மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும், அரசு தலைமை மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்களை நியமிக்க வேண்டும், மாநகராட்சி மற்றும் ஊராட்சிப் பணிகளை காண்ட்ராக்ட் விடுவதைக் கைவிட வேண்டும், மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும், புத்தூர் நால்ரோடு டாஸ்மாக் கடையை அப்புறப்படுத்த வேண்டும், மாநகராட்சிப் பகுதிகளில் கடை மற்றும் வணிக வளாகங்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள வரியைக் குறைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.



கோரிக்கைகளை வலியுறுத்தி, திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கிப் பேரணி சென்றடைந்தது. அங்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து சிறப்புரை ஆற்றினார். மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ம.செல்வராஜ், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மு.கண்ணகி, ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ், விவசாயச் சங்க மாநிலப் பொருளாளர் அயிலை சிவ.சூரியன், மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் க.இப்ராகிம் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் மனு கொடுப்பதற்காக ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்ற கட்சியினரை, காவல்துறையினர் உள்ளே அனுமதிக்க மறுத்ததால் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலையில் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் மனுவைப் பெற்றுக் கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சியின் முற்றுகையினால் அப்பகுதி முழுவதும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாகப் பரபரப்பு ஏற்பட்டது.



Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி






## 26ஆவது தமிழ்நாடு மாநில மாநாடு

2025 • ஆகஸ்ட்
**15-16-17-18**

தோழர் எம்.செல்வராசு நகர்
சேலம் சிறை தியாகிகள் அரங்கம்,
நேரு கலையரங்கம்,
பழைய பேருந்து நிலையம் அருகில், சேலம்

**2025 ஆகஸ்ட் 15 வெள்ளிக்கிழமை • சேலம்**

**மாநாட்டு கொடி ஏற்றுதல்**

தோழர் **இரா.நல்லகண்ணு** மூத்த தலைவர் | தோழர் **கோ.பழனிசாமி** முன்னாள் எம்.எல்.ஏ

**தொடக்கவுரை**

தோழர் **டி.ராஜா** முன்னாள் எம்.பி, பொதுச்செயலாளர்

**அரசியல் விளக்கவுரை**

தோழர் **அமர்ஜித் கவுர்** | தோழர் டாக்டர் **கே.நாராயணா**

**சிறப்பு கருத்தரங்கம் 'கனவுகள் மெய்ப்பட...'**

தலைமை
தோழர் **கே.சுப்பராயன்** எம்.பி,

சிறப்புரை
திரு. **எஸ்.பீட்டர் அல்போன்ஸ்** முன் எம்.பி,
மூத்த தலைவர், இந்திய தேசிய காங்கிரஸ்



## 'வெல்க ஜனநாயகம்' எழுச்சி மாநாடு

**2025 ஆகஸ்ட் 16 சனிக்கிழமை • மாலை 4.00 மணிக்கு • சேலம்**

தலைமை தோழர். **இரா.முத்தரசன்** மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

நிறைவுப் பேருரை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

**சிறப்புரையாற்றுவோர்**

ஆசிரியர் **கி.வீரமணி**
தலைவர், திராவிடர் கழகம்

திரு. **வைகோ** முன்னாள் எம்.பி
பொதுச்செயலாளர், மறுமலர்ச்சி தி.மு.க

தோழர். **தொல்.திருமாவளவன்** எம்.பி
தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

திரு. **ஈ.ஆர்.ஈஸ்வரன்** எம்.எல்.ஏ
பொதுச்செயலாளர், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி

திரு. **கமலஹாசன்** எம்.பி
தலைவர், மக்கள் நீதி மையம்

தோழர். **பெ.சண்முகம்**
மாநிலச் செயலாளர், சி.பி.ஐ.(எம்)

பேராசிரியர் **கே.எம்.காதர் மொகிதீன்**
தேசியத் தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

தோழர். **தி.வேல்முருகன்** எம்.எல்.ஏ
தலைவர், தமிழக வாழ்வுரிமை கட்சி

திரு. **கு.செல்வப்பெருந்தகை** எம்.எல்.ஏ
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

தோழர் **பழ.ஆசைத்தம்பி**
மாநிலச் செயலாளர், சி.பி.ஐ (மா-லெ விடுதலை)

பேராசிரியர் **எம்.எச்.ஜவாஹிருல்லா** எம்.எல்.ஏ
தலைவர், மனிதநேய மக்கள் கட்சி

திரு. **இரா.அதியமான்**
தலைவர், ஆதி தமிழர் பேரவை

## மாபெரும் பேரணி • பொதுக்கூட்டம்

**18-08-2025 திங்கள்கிழமை • மாலை 4.00 மணி • நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் மைதானம், சேலம்**

தலைமை தோழர் **அ.மோகன்** மாவட்டச் செயலாளர் | சிறப்புரை தோழர் **டி.ராஜா** முன்னாள் எம்.பி பொதுச் செயலாளர்

அமர்ஜித் கவுர் டாக்டர் கே.நாராயணா ஆனிராஜா சி.எச்.வெங்கடாசலம் டி.எம்.மூர்த்தி
இரா.முத்தரசன் கே.சுப்பராயன் எம்.பி அ.மு.சலீம் நா.பெரியசாமி மு.வீரபாண்டியன்
எம்.ஆறுமுகம் எம்.இரவி ப.பரமசிவம் க.பாரதி பா.தினேஷ்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி** மாநாட்டு வரவேற்புக்குழு

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.